ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும் மின்னிதழில் வாசிக்க eelanadu.ca முகநூலில் நாளாந்தச் செய்திகள்!

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 31, 29 நவம்பர் 2024 இதழ்:- 26

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! டிசம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்த நாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 23 செப்டம்பர் 2024 முதல் 14வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி. தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## தமிழீழம் எங்கும் கொட்டும் மழையிலும் இயற்கை சீற்றத்துக்கும் மத்தியிலும் மாவீரர்களுக்கு அஞ்சலி!



## "நாட்டுப் பற்றாளர்" ஆக விடை பெற்றார் மதி



மதி, மதி அண்ணர் என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட மதிசூடி குலோத்துங்கம் அவர்கள் 20 நவம்பர் 2024 இரவு 11.00 மணியளவில் அவலச் சாவினைத் தழுவிக் கொண்டார். 1983ம் ஆண்டுகளில் இருந்து இறுதி மூச்சு வரை தமிழ்த்தேசிய உணர்வோடு தேசத்தின் விடுதலைக்காக களம் ஆடிய விடுதலைப்புலிகள் இயக்கத்தை கனடா மண்ணில் கட்டி வளர்த்தவர்களில் மதி அண்ணர் முதன்மையானவர். அன்னாரது தன்னலமற்ற பணிக்கு மதிப்பளித்து விடுதலைப்புலிகள் இயக்கம் 25 நவம்பர் 2024 அன்று நாட்டுப்பற்றாளர் என்ற கௌரவத்தினை வழங்கியது. 27 நவம்பர் 2024 ஆயிரக்கணக்கான பொது மக்களின் அஞ்சலியுடன் அன்னாரது திருவுடல் நாட்டுப்பற்றாளராக தீயுடன் சங்கமமாகியது. இன்று கனடிய மண்ணில் தமிழ்மக்களது ஏகோபித்த மக்கள் அமைப்பாக விளங்கும் உலகத் தமிழர் இயக்கம் மாணவர் அமைப்பு, மகளிர் அமைப்பு இளையோர் அமைப்பு மாவீரர் அகவம் என்று விரிந்து பரந்து இருப்பதற்கு மூலவராக இருந்தவர்களில் மதி அண்ணர் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

உள்ளே! செய்திகள், கட்டுரைகள்

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX Royal Properties
MORTGAGE ALLIANCE

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
Sales Representative B.Comm.
Dir: 647-221-5220
piravien@gmail.com



21 Years Real Estate Experience

HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Simcoe St N. & Conlin Rd


Oshawa $279,000
0 Beds • 1 Bath • 1 Rooms
Welcome To University Studios!


### Sheppard Ave & Allen Rd


Toronto $619,000
2+1 Beds • 2 Baths • 4+1 Rooms
Close To Subway, Ttc, York University

### Neilson/Tapscott

Scarborough $445,000
2 Beds • 2 Bath • 5 Rooms
Close to the Hwy 401 and the TTC


### Kennedy Rd / Hwy 401

Scarborough $699,000
2+1 Beds • 2 Bath • 6 Rooms
Freshly painted & renovated!


### Sheppard & Neilson

Malvern $699,900
3 Beds • 2 Baths • 6 Rooms
Low Maintenance Fees!

### Simcoe St N/ Brittania Ave

Oshawa $770,000
4 Beds • 3 Baths • 9 Rooms
Corner lot Just like Semi Townhouse

### McLevin Ave & Morningside

Malvern $880,000
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Finished Basement

### Townline Rd & Shankel Rd

Oshawa $999,900
3 Beds • 4 Baths • 8 Rooms
Close To Highway 401, 418, 407

### Sheppard Ave E / Neilson Rd

Scarborough $842,000
3 Beds • 3 Baths • 6+2 Rooms
FULLY RENNOVATED

### Church St N & Rossland Rd W

Ajax $899,999
3 Beds • 3 Baths • 6 Rooms
Hardwood flooring throughout

### Church St N & Rossland Rd W

Ajax $899,999
3 Beds • 3 Baths • 6 Rooms
Upgraded Hardwood Floors

### Kellough St/ Mcneil St

Innisfil $1,295,000
4+1 Beds • 5 Baths • 11+3 Rooms
Open concept, large eat-in kitchen

### Ninth Line/Donald Cousens

Markham $630,000
2 Beds • 2 Baths • 4 Rooms
Minutes to Stouffville Hospital

### Mara & King

Beaverton $729,800
4 Beds • 3 Baths • 9 Rooms
2300 Square Foot Home

### Finch Ave E/ Morningside Ave

FOR LEASE
Scarborough $2,500
3+1 Beds • 3 Bath • 10+3 Rooms
Nicely Maintained And Cleaned

### Scarborough Golf/Lawrence Ave

FOR LEASE
Scarborough $1,900
2 Beds • 1 Bath • 4 Rooms
Lovely Corner Bungalow

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# வடபகுதியில் வாய்க்கால்களை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள சட்டவிரோத கட்டிடங்களை இடிக்குமாறு ஆளுநர் உத்தரவு!

வடக்கு மாகாணத்தில் வெள்ளம் வடிந்தோடாமல் வெள்ள வாய்க்கால் களை ஆக்கிரமித்து அமைக்கப் பட்டுள்ள சட்டவிரோத கட்டடங் களை இடித்து அகற்றுமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பணிப்புரை விடுத்துள்ளதுடன் இது தொடர்பில் மீண்டும் மீண்டும் பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள இடர் நிலைமை தொடர்பில் ஆரா யும், இணையவழி கலந்துரையாடல் இன்று காலை இடம் பெற்ற போதே அவர் இவ்விடயத்தை தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஏற்பட்டுள்ள இடர் பாதிப்புக்கள் தொடர்பில் அந்தந்த மாவட்டச் செயலர்கள் மற்றும் மேலதிக மாவட்டச் செயலர்களால் ஆளுநருக்கு தெரியப்படுத்தப்பட் டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டு வருவது தொடர்பிலும் ஆளுநரின் கவனத்து க்கு அவர்கள் கொண்டு வந்தனர்.



மேலும் வெள்ளம் வடிந்தோடாமல் இருப்பதற்கு வெள்ளவாய்க்கால்களை ஆக்கிரமித்து சட்டவிரோத கட்டடங் கள் அமைக்கப்பட்டுள்ளமையும் கார ணம் எனச் சுட்டிக்காட்டிய ஆளுநர், அவற்றை அகற்ற துரித நடவடி க்கை எடுக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதேபோன்று சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ள ஏனைய கட்டட ங்களையும் அகற்று மாறும் ஆளுநர் பணித்ததுடன், திரும்பத் திரும்ப இந்த விடயங்கள் தொடர்பில் பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்றும் குறிப்பிட் டார்.

# தியாகங்களின் பெறுமதி

ஜனதா விமுத்திப் பெரமுன (ஜே.வி.பி) ஆயுதப் புரட்சி ஒன்றின் மூலம் அதிகாரத்தை கைப்பற்ற முடியுமென்று நம்பி, இரண்டு முறை ஆயுதக் கிளர்சியில் ஈடுபட்டது. இரண்டு தடவைகளும் படுமோசமான அழிவை சந்தித்தது இறுதியில் பல்லாயிரக்கணக்கான உறுப்பினர் களையும் இழந்து போனது. மகாவலி யாற்றில் தினமும் சடலங்கள் மிதந்து கொண்டிருந்தன. அதன் தலைவர் றோகண விஜயவீர படுகொலை செய் யப்பட்டார். அவர் அரை உயிரில் இருக்கும் போதே எரியூட்டப்பட்ட தாகவே பின்னர் தகவல்கள் வெளி யாகியிருந்தன.

ஜே.வி.பியின் உறுப்பினர்களை அழித் தொழித்த விடயத்தில் உள்ளுக்குள் ளும் சரி, சர்வதேச ரீதியிலும் சரி அவர்களுக்கு எந்தவொரு நீதியும் கிடைக்கவில்லை. ஆனால் தங்களுக் கான நீதியென்பது அதிகாரத்தை கைப்பற்றுவது தான் என்னும் உறுதி யுடன் தங்களை புதுப்பித்துக் கொண்டு ஜனநாயகத்தை அத்திபார மாகக் கொண்டு தங்களை ஓர் அரசி யல் ஸ்தாபனமாக கட்டியெழுப்பினர்.

இந்தக் காலத்தில் அவர்களை அதி காரத்தை கைப்பற்றக் கூடிய ஒரு தரப்பாக எவருமே கருதியதேயில்லை ஆனால், அவர்கள் தொடர்ந்தும் நம்பிக்கையுடன் பயணித்தனர். அதிகாரத்தை நோக்கிச் செல்வதற் கான, ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் உச்சபட்சமாகப் பயன்படுத்திக் கொண்டு உழைத்தனர். அவர்களின் கடின உழைப்பு அவர்களை கொழும் பின் அதிகாரத்திற்கு கொண்டு வந்திருக்கின்றது.எந்த அரச படை கள் அவர்களை நிர்மூலமாக்கியதோ, அந்தப் படைகளின் தலைமைத் தளபதியாக ஜே.வி.பியே இருக்கும் அரசியல் சூ ழல் உருவாகியிருக்கின் றது. ஆயுதப் போராட்டத்தை நம்பிய போதிலும், தோல்வி தந்த படிப்பினை களிலிருந்து கற்றுக் கொண்டனர் ஆயுதங்களின் மூலம் தாங்கள் விரும் பும் அதிகாரத்தை, ஒரு போதுமே கைப்பற்ற முடியாதென்பதை புரிந்து கொண்டு, சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றங்களை உள்வாங்கிய அதே வேளை, தங்களின் அடிப்படையான கொள்கைகளையும் விட்டுக் கொடுக் காமல் ஓர் அதிகாரத் தரப்பாக எழுச்சி யுற்றிருக்கின்றனர்.

மார்க்சியம் தொடர்பில் பேசிய போதும் கூட தற்போது யதார்த்த வாதத்திற்கே முன்னுரிமையளிக்கும் ஓர் அரசியல் ஸ்தாபனமாக தங்களை மாற்றியிருக்கின்றனர். இந்தப் பின் புலத்தில் நோக்கினால் அவர்களது தியாகங்கள் வீண் போகவில்லை.

ஜே.வி.பி. அதன் இலக்கில் வெற்றி பெற்று விட்டது. நமது சூழலை உற்று நோக்கினால் என்ன தெரிகின் றது? ஆயுத விடுதலைப் போராட்டத் தின் மூலம் அதிகாரத்தை கைப்பற்றப் புறப்பட்டு 1990களில் ஜனநாயக நீரோட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் (டி.பி.எல்.எப்.) ஆகிய அரசி யல் கட்சிகளின் வளர்ச்சி என்ன? வடக்கு, கிழக்கில் இவர்களுக்கு இருக்கின்ற அரசியல் கட்டமைப்பு என்ன? மக்கள் ஆதரவு என்ன? ஏதாவது இருக்கின்றதா? இலங்கை தமிழ் அரசு கட்சியின் வீட்டுச் சின்ன த்தில் போட்டியிட்டதன் மூலம், பெற்றுக் கொண்ட வெற்றியை, தனிக் கட்சியாக ஆகக் குறைந்தது ஒரு கூட்டாக கூட தக்கவைக்க முடியாத கையறுநிலைக் கட்சிகளாகவே இரு க்கின்றனர்.

மறுபுறம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அழிவுற்று, பதினைந்து வருடங்களாகின்றது. கடந்த பதினை ந்து வருடங்களில் அந்த அமைப்பில் எஞ்சியவர்களால் புதிய சூழலுக்கான அரசியல் ஸ்தாபனமொன்றை கட்டி யெழுப்ப முடிந்ததா? புலிகள் அமைப் பிலிருந்து, ஆகக் குறைந்தது, சில முன்னேற்றகரமான சிந்தனையாளர்கள் கூட வெளித்தெரியவில்லையே ஏன்? இத்தனை புலம்பெயர் அமைப்புகள் என்ன செய்திருக்கின்றன? ஏன் முடிய வில்லை.

ஜனநாயக போராளிகள் என்னும் பதாகைகளையெல்லாம், தமிழ் மக்கள் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை என்பதைத்தானே, கடந்த பொதுத் தேர்தல் நிரூபித்திருக்கின்றது. றோகண விஜயவீரவும் கொல்லப்பட் டார் ஜயோ தலைவர் போய் விட்டாரே என்று ஒப்பாரி வைத்துக் கொண்டி ருக்கவில்லையே அந்த அமைப்பு அதே வேளை பழிவாங்கும் அரசிய லையும் செய்ய முயற்சிக்கவில்லை ஏனெனில் ஓர் அரச இயந்திரத்தை பழிவாங்க முடியாது அதற்குப் பதிலாக அதனையே கைப்பற்றும் உத்திகள் பற்றியே ஜே.வி.பி சிந்தித் தது. சாதித்தது. எனவே தியாகங்களு க்கான பெறுமதி என்பது வருடம் தோறும் விளக்கேற்றுவதுடனும், சில மரக்கன்றுகளை புலிகளின் பெற்றோ ருக்கு வழங்குவதுடன் முடிந்து விடுவதில்லை. நம்மவர்களது தியாய ங்களுக்கான பெறுமதி என்பது, புதிய சூழ்நிலைகளுக்கான செயலிலேயே தங்கியிருக்கின்றது.

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# மாவீரர் தினம் சாதாரணமாக இடம்பெறும் நிகழ்வு இனவாதம் தலைதூக்குவது என்பது பொய் - சபாநாயகர்

நாட்டில் இனவாத பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்குவதாக ஊடகங்கள் வெளியிட்டாலும் அவ்வாறான எந்த விடயமும் நடைமுறையில் இடம் பெற்றதாக தகவல் இல்லை. அவ்வாறான சம்பவம் உண்மையாக இடம்பெறுமாக இருந்தால் அதனை இல்லாமல் செய்வதற்கு பாராளுமன்றம் நடவடிக்கை எடுக்கும் என சபாநாயகர் அசோக்க ரன்வல தெரிவித்தார்.

சபாநாயகர் செவ்வாய்க்கிழமை 26 நவம்பர் 2024 அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா சபையை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டில் இனவாத பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்குவதாக ஊடகங்கள் வெளியிட்டாலும் அவ்வாறான எந்த விடயமும் நிஜத்தில் காணக் கூடியதாக இல்லை. உண்மையாக அவ்வாறான சம்பவம் இடம் பெறுமாக இருந்தால் பாராளுமன்றத்தில் அது தொடர்பில் கலந்துரையாடி, அதனை இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுப்போம்.

அதேபோன்று வடக்கில் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படுவது தொடர்பில் எந்த கருத்தாடலும் நாட்டுக்குள் இருப்பதாக தெரியவில்லை. சாதாரணமாக இடம் பெறும் நிகழ்வே இடம் பெறுவதாக எமக்கு தகவல் கிடைத்திருக்கிறது. கடந்த காலங்களில் மேற்கொண்டது போன்று மீண்டும் செயற்படுவார்கள் என நாங்கள் நினைக்கவில்லை.



வடக்கு மக்கள் தொடர்பில் எங்களுக்கு உண்மையான நம்பிக்கை இருக்கிறது. அவர்களின் எதிர்பார்ப்பாக இருப்பது, தங்களின் பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக இந்த நாட்டை மீள கட்டியெழுப்புவதாகும்.

அத்துடன் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், பாராளுமன்றத்தில் முதல்நாள் அமர்வின் போது செயற்பட்ட விதம் தொடர்பில், அவர் தனது கவலையை தெரிவித்திருந்தார். அவர் ஒரு புதிய உறுப்பினர் என்ற வகையில், தவறுதலாகவே எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனத்தில் அமர்ந்ததாகவும் வேண்டுமென்று அவ்வாறு செயற்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் இந்த சம்பவம் தொர்பில் எதிர்க்கட்சித் தலைவரும் மிகவும் முன்மாதிரியாக நடந்து கொண்டு, அவரின் பெருந்தன்மையை வெளிப்படுத்தி இருந்தார், இதனையே நாங்கள் பாராளுமன்றத்தில் எதிர்பார்க்கிறோம். அதனால் இந்த சிறிய விடயத்தை பெரிதாக்கி இதனை நாட்டின் பிரதான பிரச்சினையாக்க நாங்கள் முற்படக்கூடாது.

அர்ச்சுனா எம்.பி தன்னால் ஏற்பட்ட தவறை உணர்ந்து, அதற்காக பகிரங்கமாக தனது கவலையை வெளிப்படுத்தியதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் என்றார்.

## மாவீரர் நாள்:- கஜேந்திரகுமாருடன் பொலிசார் தர்க்கம்

அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் 27 இல் மாவீரர் நினைவேந்தல் நடைபெற்றன.

மாவீரர் நினைவேந்தலை அனுஷ்டிக்க அனுர அரசு இடமளிக்கும் என்று நம்பிக்கையுடன் அங்கு சென்ற மக்களிடம் பொலிஸார் பாதுகாப்பு கெடுபிடிகளை விதித்து அங்கு செல்வதை தடுக்க முயன்றுள்ளனர். அத்துடன் அங்கு சென்ற வாகனங்களின் நம்பர் பலகைகள் பொலிஸாரினால் பதியப்பட்ட பின்னர் குறித்த மாவீரர் துயிலும் இல்லத்திற்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அத்துடன் அங்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடனும் பொலிஸார் முரண்பட்டதுடன் அங்கு சிறு பதற்ற நிலையும் ஏற்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒரேயொரு மாவீரர் துயிலும் இல்லம் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள கஞ்சிகுடிச்சாறு பிரதேசத்தில் அமைந்துள்ளது. அம்பாறை மாவட்டத்தில் 700க்கும் மேற்பட்ட மாவீரர்களின் நினைவுச் சுடர்கள் இங்கு நிறுவப்பட்டுள்ளன. கஞ்சிகுடிச்சாறு மாவீரர்கள் துயிலும் இல்லத்தில் கடந்த 1993ஆம் ஆண்டு தொடக்கம் 2006ஆம் ஆண்டுவரை தமிழீழ விடுதலைப் புலிகளினால் தீபம் ஏற்றி நினைவேந்தல் நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டு வந்துள்ளது. இந்த மாவீரர் துயிலும் இல்ல துப்புரவுப் பணிகள் திருக்கோவில் பிரதேச மாவீரர் குடும்பங்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மற்றும் அரசியல் கட்சிகள் ஆகியோரால் முன்னெடுக்கப்பட்டதோடு மேற்படி துயிலும் இல்லம் அமைந்துள்ள காணியில் காணப்பட்ட பற்றைப்புதர்களை அகற்றி விழுந்து கிடந்த நினைவுச் சுடர்களை நிறுத்தி வைத்து துப்புரவுப் பணிகளை முன்னெடுத்தனர்.

இதன்படி இம்மாவீரர் துயிலும் இல்லத்தில் நவம்பர் மாதம் 27ஆம் திகதி மாலை தமிழரின் தேசிய மாவீரர் நாள் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டன. மாலை 6.05 நிமிடத்தில் மாவீரர்களுக்கான பொதுச்சுடர் ஏற்றி நினைவேந்தல் மேற்கொள்ளப்பட்டது.




கனடா – அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)
Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அனைத்து அம்பாள் அடியார்களிற்கும் வணக்கம்!

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு வணக்கம். கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் இலாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாக கனடா அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவரை காலமும் கோயில் நிலம் வாங்குவதற்கு நன்கொடை கொடுத்த பக்தர்கள் அனைவரும் உங்கள் பழைய பற்றுச்சீட்டை கோயிலில் கொடுத்து கனடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக்கம் பதியப் பெற்ற புதிய பற்றுச்சீட்டை கோயிலில் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச் சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு நிலம் வாங்குவதற்கும் இப்போது நடைபெறும் திருப்பணிக்காக நன்கொடை செய்வதற்கும் அல்லது எந்தவிதமான பூஜைகள் திருவிழாக்களிற்கும் கோயிலில் பணம் கொடுக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓம் தாயே மகமாரி – நிர்வாகசபை

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# 6 தமிழ் இளைஞர்கள் வலுக்கட்டாயமாக ரஷ்ய இராணுவத்தில் இணைக்கப்பட்டுள்ளனர்



உக்ரேனுக்கு எதிராக ரஷ்யா முன்னெடுத்து வருகின்ற யுத்தத்தில் புலம் பெயர்நாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் வலுக்கட்டாயாக இணைக்கப்படுவதாக அண்மைக் காலமாக குற்றச்சாட்டுக்கள் எழுந்து வந்தன.

இந்நிலையில் யாழ்ப்பாணம் குருநகர் பகுதியை சேர்ந்த 25 வயது இளைஞர் ஒருவர் சுற்றுலா விண்ணப்பத்தின் ஊடாக பிரான்ஸ் நாட்டிற்கு சென்ற வேளை வலுக்கட்டாயமாக ரஷ்ய இராணுவத்தில் இணைக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள சம்பவம் பெரும் அதிவலைகளை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதம் 04ஆம் திகதி குறித்த இளைஞன் இலங்கையிலிருந்து பிரான்ஸ் நாட்டிற்கு செல்வதற்கு முயற்சித்துள்ளார். இதன் போது ரஷ்ய விமான நிலையத்தில் தரை இறங்கி அங்கிருந்து முகவர் ஊடாக பிரான்ஸ் நாட்டுக்கு செல்ல வேண்டும் என அவருக்கு வெளிநாட்டு முகவர்களினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ரஷ்ய விமான நிலையத்தில் தரையிறங்கிய இளைஞனுடன் முல்லைத்தீவை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவரும் யாழ்ப்பாணம் மெல்லியடைய சேர்ந்த 20 வயதுடைய இளைஞர் ஒருவரும் குருநகர் பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவரும் ஒன்றாக இணைந்து பயணித்துள்ளனர்.

இவர்கள் அனைவரையும் ரஷ்ய விமான நிலையத்தில் இராணுவ அதிகாரி ஒருவர் ஊடாக பிரான்ஸ் நாட்டிற்கு அழைத்து செல்வதாக முகவர் குறிப்பிட்டு இளைஞர்களை அழைத்துச் சென்றுள்ளார். அதனை அடுத்து அங்குள்ள இராணுவ முகாமில் இவர்களைத் தங்க வைத்து இவர்களுக்கு ரஷ்ய இராணுவத்தின் சீருடைகள் வழங்கப்பட்டு 15 நாட்கள் கட்டாயமாக பயிற்சியின் பின்னர் உக்ரைன் நாட்டின் எல்லையில் போருக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக குருநகர் பகுதியை சேர்ந்த கோமஸ் அதிஸ்ராஜா மிதுர்ஷன் தாயாருக்கு தனது புகைப்படங்களைத் பகிர்ந்துள்ள நிலையில் இந்த அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. குறித்த பயணத்திற்காக முகவர் ஒருவருக்கு ஒவ்வொருவரும் தலா 60 லட்சம் ரூபாய் வரையான பணத்தை இவர்கள் செலுத்தியுள்ளனர். இது தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை சுமார் 280க்கும் மேற்பட்ட இலங்கை இராணுவத்தினர் ரஷ்ய படைகளோடு இணைந்து, உக்ரைனுக்கு எதிராக சண்டையிட்டு வருவதாக அண்மையில் தகவல் ஒன்று வெளியாகியது.

அவ்வாறு இணைந்துள்ள இலங்கை இராணுவத்தை சேர்ந்த ஒருவரை உக்ரேன் இராணுவம் உயிருடன் கைது செய்து விசாரணைகள் முன்னெடுக்கப் படுகின்ற காணொளி ஒன்றும் கடந்த 21ஆம் திகதி வெளியாகியிருந்தது.

இலங்கையில் உள்ள ரஷ்ய மா.ஃபியாக்கள் மூலமாக ரஷ்ய இராணுவத்திற்கு ஆட்கள் திரட்டப்படுவதாக குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன. இந்நிலையிலேயே 6 தமிழ் இளைஞர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக சென்றிருந்த நிலையில் வலுக்கட்டாயமாக ரஸ்ய படைகளில் இணைக்கப்பட்டுள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# புதிய பாராளுமன்றத்தின் கொள்கை விளக்கவுரையில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவும் இனவாதமும்



புதிய பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தனது தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது கொள்கை விளக்கவுரையை நிகழ்த்தினார்.

பாராளுமன்றத்தின் கூட்டத் தொடர்களை ஜனாதிபதிகள் ஆரம்பித்து வைக்கும் போது அந்த நிகழ்வுகளை 'சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தல்' என்றே அழைப்பதுண்டு. ஆனால் ஜனாதிபதி திஸநாயக்க எந்தவிதமான பழைய சம்பிரதாயங்களையும் பின்பற்றாமல் படை அணி வகுப்புகளோ அல்லது வீண் செலவில் ஆரவாரங்களோ எதுவுமின்றி எளிமையான முறையில் வந்து கொள்கை விளக்கவுரையை நிகழ்த்தியதை காணக்கூடியதாக இருந்தது.

அவரது இந்த செயல் முன்னுதாரணமானதும் வரவேற்கப்பட வேண்டியதுமாகும். அவரது அரசாங்கத்தின் வருங்கால நடவடிக்கைகளில் இவ்வாறாக பல்வேறு முன்னுதாரணங்களை எதிர்பார்க்கலாம். ஜனாதிபதி தனது உரையில் அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் செயல்திட்டங்களை விளக்கிக் கூறியிருக்கிறார். அடுத்த மாதம் இடைக்கால பட்ஜெட் அல்லது கணக்கு வாக்கெடுப்பும் அடுத்த வருடம் முழுமையான வரவு செலவு திட்டமும் சமர்ப்பிக்கப்படும் என்று அவர் அறிவித்தார்.

இனவாத அரசியலும் மதத்தீவிரவாதமும் மீண்டும் தலையெடுப்பதற்கு ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்ற பிரகடனத்தையும் அவர் சபைக்கும் அதன் ஊடாக நாட்டுக்கும் அறிவித்தார். அதுவும் வரவேற்கப்பட வேண்டியதே. இனவாத அரசியலும் மதவாதமும் நாட்டுக்கு ஏற்படுத்திய அழிவுகளை நன்குணர்ந்தவராக அவர் அந்த உறுதிமொழியை வழங்கியிருக்கிறார். இது கால வரையில் ஓர் இனத்தை இன்னோர் இனத்துக்கு எதிராக தூண்டிவிட்டு பெரும்பான்மையினவாத அணி திரட்டலைச் செய்து நாட்டு மக்கள் மத்தியில் பிரிவினைகளை ஏற்படுத்திய அரசியல்வாதிகளில் எவரும் தாங்கள் செய்வது இனவாத அரசியல் என்று சொன்னதில்லை.

தேசத்தின் நலன்களைப் பாதுகாப்பதே தங்கள் இலட்சியம் என்று தான் அவர்கள் கூறினார்கள். இன, மத வேறுபாடுகள் கடந்து இலங்கையர் என்ற அடையாளம் பற்றியும் அவர்கள் பேசினார்கள். ஆனால் அவர்களின் நடவடிக்கைகள் எல்லாமே சிறுபான்மைச் சமூகங்களை தேசிய அரசியல் நீரோட்டத்தில் இருந்து அந்நியப் படுத்தியதன் விளைவாக அந்த சமூகங்களுக்கு மாத்திரமல்ல முழு நாட்டுக்குமே பேரழிவை ஏற்படுத்தின. அதுவே சுதந்திரத்தின் பின்னரான இலங்கை அரசியல் வரலாறு.

ஆனால் இனவாத அரசியலையும் மதத்தீவிரவாத்தையும் மீண்டும் தலையெடுக்க ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை என்று பிரகடனம் செய்திருக்கும் ஜனாதிபதி, இனவாத அரசியலின் விளைவாக நாட்டில் தோன்றிய பிரச்னைகளுக்கு பயனுறுதியுடைய தீர்வுகளைக் காண வேண்டும் என்ற புரிதலுடன் தான் அவ்வாறு செய்திருக்கிறார் என்று நம்புகிறோம். இலங்கையின் முன்னைய எந்தவொரு பிரதமருக்கோ அல்லது ஜனாதிபதிக்கோ கிடைத்திராத ஆணையை அதாவது முழுநாடும் தழுவிய ஆணையை பெற்றிருக்கும் ஜனாதிபதி திஸ நாயக்க கடந்த காலத்தில் ஆட்சியாளர்களினால் கடைப்பிடிக்கப் பட்ட கொள்கைகளினாலும் அவர்கள் முன்னெடுத்த நடவடிக்கைகளினாலும் நாட்டுக்கே நேர்ந்த அவலத்தை பெரும் பான்மை இனத்தவர்களுக்குப் புரிய வைத்து அவர்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடிய ஒரு தகுநிலையில் இருக்கிறார். வடக்கு, கிழக்கில் சிறுபான்மைச் சமூகங்கள் பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்கும் போது தங்களது நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை எல்லாம் அலட்சியம் செய்துவிட்டு அவ்வாறு செய்யவில்லை. புதிய அரசியல் கலாசாரத்தை(9ம் பக்கம் பார்க்க)

## இனவாதத்தின் வரையறை என்ன?

தேசிய மக்கள் சக்தியினர் கூட எதிர்பார்த்திராத வெற்றியொன்று அவர்களுக்கு கிட்டியிருக்கின்றது. இது உண்மையில் அவர்களுக்கு மகிழ்ச்சியை கொடுத்திருக்குமா என்பதும் சந்தேகம் தான் ஏனெனில் இப்போது அவர்கள் வழங்கிய வாக்குறுதிகளின் கைதியாகியிருக்கின்றனர். அவர்களால் சாதாரணமாக இதிலிருந்து தப்பிச் செல்ல முடியும் தான் ஆனால், அவ்வாறு தப்பிச் செல்ல முயற்சித்தால், அவர்களும் முன்னைய ஆட்சியாளர்கள் போன்று பத்தோடு பதினொன்று தான்.

அநுரகுமார அரசாங்கம் என்ன செய்யப் போகின்றது என்பதை அவதானிப்பதில் தவறில்லை. பலரை அவதானித்து ஏமாந்து போன வரலாற்றைக் கொண்டிருக்கும் ஈழத் தமிழினம், இந்த அலையிலும் சிறிது காலம் மிதக்கட்டும் என்று தான் தற்போதைக்கு சொல்லி வைக்க முடியும். ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தனது அக்கிராசன உரையில் இனி இனவாதத்திற்கு இங்கு இடமில்லை என்று குறிப்பிட்டிருக்கின்றார் தேர்தல் முடிவுகள் வெளியானதைத் தொடர்ந்து ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா, வடக்கு மக்கள் இனவாதத்தை கை விட்டிருக்கின்றனர் என்று குறிப்பிட்டிருந்தார்.

அநுரவின் உரையிலும் அந்தத் தொனியே மேலோங்கியிருக்கின்றது. இங்கு நாம் கேட்க வேண்டிய கேள்வி, இனவாதத்திற்கான வரையறை என்ன? அதனை எவ்வாறு வரையறுப்பது? இலங்கைத் தீவைப் பொறுத்தவரையில் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்னுமடிப்படையில் அவர்களுக்கான தனித்துவமான அரசியல் இருப்பைக் கோரி வருகின்றர். தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கையைத் தான், ரில்வின் சில்வா இனவாதம் என்கின்றாரா? தமிழ் மக்களின் நீண்டகால கோரிக்கைக்கு எதிராகத்தானா வடக்கு மக்கள் பெரும் பான்மையாக ஜே.வி.பிக்கு வாக்களித்திருக்கின்றனர்?

இதற்கு முதலில் பதிலளித்திருக்க வேண்டியது வடக்கிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தான் ஆனால் அவர்களோ வெற்றிக்களிப்பை விகாரைகளுக்குள் கொண்டாடி மகிழ்ந்து கொண்டிருக்கின்றனர். ரில்வின் சில்வாவின் கருத்தை தேசிய மக்கள் சக்தியில் எவருமே மறுதலிக்கவில்லை அதுவே அநுரவின் அக்கிராசன உரையிலும் பிரதிபலிக்கின்றது. இலங்கையின் வரலாற்றில் மேற்கு சார்பான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில்தான், தமிழ் மக்களுக்கு எதிரான மோசமான இன ஒடுக்குமுறை அழித்தொழிப்பு நிகழ்ந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மேற்குலக சார்பு, தாராளவாதப் பின்புலம் கொண்ட அவர்களுக்குள், தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதம் உள்ளுறைவதை தடுக்க முடியவில்லை. ஏனெனில், தென்னிலங்கை அரசியல் பாடசாலையில் படித்துத் தேறிய அனைவருமே இனவாதத்தை கூட்டியோ அல்லது குறைத்தோ கடுமையாகவோ அல்லது மென்மையாகவோ பயன்படுத்துவதில் தேர்ச்சியுள்ளவர்களாக இருந்ததே இதுவரையான வரலாறு.இந்த வரலாற்றிற்கு மாற்றான எவ்வாறானதொரு ஆட்சியை அநுர வழங்கப் போகின்றார்? அதனை வழங்க அவர் முயற்சித்தால் அதற்கு தமிழ் மக்கள் உதவத் தான் வேண்டும்.

ஆனால்முதலில் அநுரகுமார தேசிய இனப்பிரச்னை ஒன்று நாட்டில் இருக்கின்றது என்பதை ஏற்றுக் கொண்டு, அதற்கு ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதை சிங்கள மக்களுக்குச் சொல்ல வேண்டும் அதனை தீர்க்காமல் நாடு முன்னோக்கி பயணிக்க முடியாது என்னும் உண்மையை சிங்கள இளைஞர், யுவதிகளுக்குச் சொல்ல வேண்டும். விகாரைக்குள் உட்புகுத்த வேண்டும் அவ்வாறில்லாது, நாம் எல்லோரும் இலங்கையர்கள், ஒரு தாய் பிள்ளைகள் என்னும் வசனங்கள் பிரச்னையை மூடி மறைக்குமே தவிர ஒரு போதும் தீர்க்காது. பிரச்சினையை மூடி மறைத்துக் கொண்டு ஐக்கியம் பற்றிப் பேசுவதும் ஒரு வகையான இனவாதம் தான்.

# நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்மக்களது தீர்ப்பும் சீனத் தூதுவரின் கருத்தும்



தேசிய மக்கள் சக்தியின் அரிய வெற்றியைத் தொடர்ந்து, இலங்கைக்கான சீனத் தூதுவர், வடக்கு கிழக்கிற்கு விஜயம் செய்திருந்தார். சீனத் தூதுவர் வடக்கு கிழக்கிற்கு விஜயம் செய்வது புதிய விடயம் அல்ல ஆனால் தேசிய மக்கள் சக்தியின் வெற்றியைத் தொடர்ந்து அவரது விஜயம் இடம்பெற்றதால் சற்று கூடுதல் கவனத்தை பெற்றிருக்கின்றது.

அவரது விஜயத்தின் போது வடக்கு மக்களின் தேர்தல் முடிவுகள் தொடர்பில் அவர் தெரிவித்திருந்த கருத்துக்களே முக்கிய காரணம் — அதாவது, தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் உங்களுடைய நிலைப்பாடு என்ன என்னும் கேள்விக்கு சீனத் தூதுவர் அளித்த பதில் 'நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்ச் சமூகம் ஒரு சரியான முடிவை எடுத்திருப்பதாகவே நான் கருதுகின்றேன்'. தமிழ்த் தேசிய அரசியலின் மையமாக வடக்கு மாகாணமே இருந்து வந்திருக்கின்றது.

அதேவேளை தமிழ் மக்களின் அரசியல் என்றால் அது வடக்கு மாகாணம் தான் என்னும் புரிதலே தென்னிலங்கைக்கும் இராஜதந்திர சமூகத்திற்கும் உண்டு. அந்த அடிப்படையில் தான் அடிக்கடி வடக்கிற்கு ராஜதந்திரிகள் விஜயங்களை மேற்கொள்வதுமுண்டு. இவ்வாறானதொரு பின்னணியில் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு மக்கள் பெரும்பான்மையாக ஜே.வி.பிக்கு வாக்களித்து, வடக்கு அரசியலிற்கு புதிய முகமொன்றை காண்பித்திருக்கின்றனர். தமிழ்த் தேசிய தரப்புக்களை ஒரு மாற்றாகக் கருதாமல் தேசிய மக்கள் சக்தியை ஒரு மாற்றுத் தலைமையாக கருதியிருக்கின்றனர்.

தமிழ்த் தேசிய தரப்புக்களாக தங்களை அடையாளப்படுத்தியிருக்கும் அனைத்து கட்சிகளுமே வடக்கில் தோல்வியுற்றியிருக்கின்றன. உதாரணமாக தமிழ் அரசு கட்சி பொருத்தமற்றது என்று கருதியிருந்தால் வடக்கு மக்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை ஆதரித்திருக்க வேண்டும் அல்லது ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியை ஆதரித்திருக்க வேண்டும் ஆனால் அவ்வாறில்லாது முற்றிலும் மாறுபட்ட, கடந்த காலத்தில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுகளை முற்றிலுமாக எதிர்த்திருந்த தென்னிலங்கை கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவை ஆதரித்திருக்கின்றனர் அரசியலில் நீண்ட அனுபமும் தொடர்புமுள்ள தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்களை தோற்கடித்திருக்கின்றனர்.

இந்த விடயத்தை ஓர் அரசியல் மாற்றமாக புரிந்து கொண்டால், சீனத் தூதுவர் அவ்வாறு கூறியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னை மற்றும் மனித உரிமைகள் விவகாரத்தில் கரிசனை கொண்டிராத அதே வேளை தென்னிலங்கையில் எந்த அரசாங்கம் இருந்தாலும் அவர்களுடன் இணைந்து செயற்படுவதை பிரதான கொள்கையாகக் கொண்டிருக்கும் சீனா, அவ்வாறு கூறாதிருந்தால் தான் நாம் ஆச்சரியப்பட வேண்டும்.

எனவே சீனத் தூதுவரின் கருத்திற்கு விளக்கங்கள் வழங்கி நேரத்தை வீணாக்காமல், தமிழ் சமூகம் அரசியலை எவ்வாறு உற்று நோக்க முற்படுகின்றது குறிப்பாக இளைய தலைமுறையினர் மரபார்ந்த தமிழர் அரசியலிலிருந்து விலகிச் செல்கின்றார்களா? புதிய தலைமையொன்றை அவர்கள் தேடுகின்றார்களா — அவ்வாறனதொரு தலைமைத்துவத்தை ஏன் தற்போதுள்ளவர்களால் வழங்க முடியவில்லை?

இந்தக் கேள்விகளுக்கு பதிலை தேடும் முயறசியில்தான் தமிழர் தரப்புக்கள் தங்களது நேரத்தை விரயம் செய்ய வேண்டும்.

நடந்து முடிந்த தேர்தலில் வாக்குகளை கூட்டிப் பார்த்து கதைகள் சொல்லும் ஆய்வாளர்கள் என்போர், தங்களின் கற்பனைக் குதிரைக்கு கடிவாளமிடுவதை விடுத்து, நிஜத்திற்கு திரும்புவது அவசியம். நடந்து முடிந்த தேர்தல் தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு மட்டுமான தோல்வியல்ல மாறாக, வடக்கை தளமாகக் கொண்டிருக்கும் கருத்துருவாக்கிகள் ஆய்வாளர்கள் என்போரின் தோல்வியும் தான். முதலில் தங்களின் தோல்வியை ஒப்புக் கொள்ளும் போது மட்டும் தான், ஆரோக்கியமான உரையாடல்கள் உருவாகும்.

# ட்ரம்ப் மீதான வழக்குகள் தள்ளுபடி

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக டொனால்ட் டிரம்ப் மீண்டும் பதவி யேற்கவுள்ள நிலையில் அவர் மீது சுமத்தப்பட்டிருந்த வழக்குகளை நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக, பதவி யேற்க உள்ள டிரம்ப் மீது பாலியல் உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் நிலுவையில் காணப்பட்டிருந்தன. குறிப்பாக 2020 ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் முடிவுகளை மாற்றியமைக்க முயன்றதாக ட்ரம்ப் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முடிவை மாற்றியமைக்க முயன்றதாக டிரம்ப் மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்கை தள்ளுபடி செய்யுமாறு சட்டத்தரணி ஊடாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக அமெரிக்க ஜனாதிபதி ஒருவரிடம் விசாரணை நடத்த அமெரிக்க நீதித் துறைக் கொள்கை ரீதியில் அனுமதி இல்லை என நீதிமன்றத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி ட்ரம்ப் மீதான குற்ற வழக்கை தள்ளுபடி செய்து உத்தர விட்டார். அண்மையில் ட்ரம்ப் மீதான அரசாங்கத்தின் ரகசிய ஆவணங்களைச் சேமித்து வைத்திருந்ததாக தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சீனாவில் இருந்து வரும் பொருட்களுக்கு 10வீத கூடுதல் வரி விதிப்பதாகவும், மெக்சிகோ மற்றும் கனடாவில் இருந்து வரும் அனைத்து பொருட்களுக்கு 25வீத வரி விதிப்பதாகவும் ட்ரம்ப் திங்கள் கிழமை அறிவித்தார். இந்த வரி விதிப்பானது 2025 ஜனவரியில் அமுலுக்கு வரும்.




# தேசியத் தலைவர் பிறந்த வல்வை வீட்டில் 70வது பிறந்த நன்நாள் கொண்டாட்டம்



தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 70ஆவது பிறந்த தினமான 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வல்வெட்டித்துறையில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

வல்வெட்டித்துறை ஆலடி பகுதியில் அமைந்துள்ள புலிகளின் தலைவர் வே பிரபாகரனின் பூர்வீக வீடு அமைந்திருந்த காணிக்குள் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் கொண்டாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது.

கேக் வெட்டி பிறந்த தினத்தினை கொண்டாடியதுடன் வீடு அமைந்திருந்த காணிக்குள் மர நடுகைகளும் முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை புலிகளின் தலைவரின் புகைப்படத்தினை கொண்ட பதாகை ஒன்று காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் போது அங்கு வந்த வல்வெட்டித்துறை பொலிஸார் புலிகளின் தலைவருடைய புகைப் படத்தினை காட்சிப்படுத்த முடியாது என்றும், அதற்கு சட்டத்தில் இடமில்லை எனவும், புகைப்படத்தினை நீக்கி விட்டு பிறந்த நான் கொண்டாட்ட நிகழ்வுகளை நடத்துங்கள் என அறிவுறுத்தினார்கள். அதன் பிரகாரம் பதாகையில் இருந்த புலிகளின் தலைவரின் புகைப்படத்தினை மறைத்து விட்டு பிறந்தநாள் நிகழ்வினை சிறப்பாக கொண்டாடினார்கள். புலிகளின் தலைவரின் பூர்வீக வீடு இடித்து அழிக்கப்பட்டு தற்போதும் வெறும் காணியே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# அநுரவின் பதவிப் பிரமாணத்திற்காக ஒதுக்கப்பட்ட 200 மில்லியன் ரூபா பொது மக்களின் கணக்கில் வைப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பதவிப்பிரமாணத்திற்கு ஒதுக்கப்பட்டு பயன்படுத்தப்படாத 200 மில்லியன் ரூபா பணம் மக்களின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் நீரியல் மற்றும் கடல்வள பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்துள்ளார்.



காலியில் 25.11.2024 இடம் பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அண்மையில் இடம் பெற்ற ஜனாதிபதி பதவிப் பிரமாணம் நிகழ்வுக்கு வரவு செலவுத் திட்டத்தில் சுமார் 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார். எனினும் தற்போது அந்த பணம் மக்கள் மயமாக்கப்பட்டுள்ளதாக ரத்ன கமகே தெரிவித்துள்ளார். மேலும், தமது அரசாங்கத்தின் எம்.பி.க்கள் மற்றும் அமைச்சர்களுக்கு என ஒதுக்கப்பட்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் அனைத்தும் இனி மக்களின் கணக்கில் வரவு வைக்கப்படும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# தமிழ்சமூக செயற்பாட்டாளர் அஜித் சபாரெத்தினம் தொடுத்த அவதூறு வழக்கில் ஒன்ராறியோ நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு சமூக ஊடகங்களில் அவதூறு பரப்புவோருக்கு படிப்பினை!



கனடா தமிழர் வர்த்தக சம்மேளனத் முன்னாள் தலைவரும் மிஸ்ரர் தமிழ் அமைப்பின் ஆரம்ப கர்த்தாவும் சமூக செயற்பாட்டாளருமான திரு அஜித் சபாரத்தினத்தின் மீது சமூக ஊடகங்களினூடாக அவதூறு தெரிவிக்கப்பட்டதற்கு எதிராக அவரினால் தொடுக்கப்பட்ட வழக்கில் ஒன்ராறியோ உயர் நீதிமன்றம் இரு வேறு திகதிகளில் கூடி அஜித் சபாரத்தினத்திற்கு நட்டஈடாக மொத்தத் தொகையாக 123,000 டொலர்கள் பின்வரும் அடிப்படையில் வழங்கும்படி உத்தரவிட்டிருந்தது. .

2022 ஆகஸ்ட்18 அன்றைய திகதியின் படி பொது நட்டஈடாக 75,000 டொலர்களும் மற்றும் தண்டனையாகவும் முன் மாதிரியாக மற்றவர்கள் இவ்வாறான செயல்களைச் செய்வதனைத் தடுக்கும் முகமாக விதிக்கப்பட்ட தண்டப் பணம் 25,000 டொலர்கள் 2022 நவம்பர் 22 அன்றைய திகதியின்படி வாதியான அஜித் சபாரத்தினத்திற்கு கணபதிப் பிள்ளை யோகநாதன் MK Tamil 2137534 Ontario Corp k PARAII Media Group m PARAII.Com பிரதிவாதிகளும் பகுதியான நட்டஈடாக டொலர்கள் 23,000 வாதிக்குக் கொடுக்கும்படி உயர் நீதிமன்ற நீதிபதி உத்தர விட்டிருந்தனர்.

இவை யாவும் 30 நாட்களுக்குள் கொடுக்கப்பட வேண்டும் என்று நீதிபதியினால் கையொப்பமிடப் பட்டிருந்தது.

இதனை எதிர்த்து மேன்முறையீடு செய்திருந்த திரு கணபதிப் பிள்ளை யோகநாதன் அவர்களது வாதத்தை 14 நவம்பர் 2024 நீதிமன்றம் வழக்கை விசாரணை செய்து 20 நவம்பர் 2024 நிராகரித்து திரு அஜித் சபாரெத்தினம் அவர்களுக்கு மேலதிகமாக 5000.00 டொலர்கள் செலுத்தும்படி உத்தரவிட்டுள்ளதுடன் வழக்கைத் தள்ளுபடி செய்துள்ளது.

இவ்வழக்குத் தொடர்பாக திரு அஜித் சபாரத்தினம் அவர்கள் தெரிவிக்கையில் நான் எனது சுய கௌரவத்திற்காக இவ்வழக்கைத் தொடுத்தேன் ஆயினும் பணவசதிகள் இல்லாமையால் சமூகத்தில் உள்ள மதிப்பார்ந்த பலர் இவர்களைப் போன்றவர்களால் அவமானப்படுத்தப்பட்டு கூனிக் குறுகி நிற்கின்றார்கள். சமூக ஊடகங்கள் இனி வரும் காலங்களில் இது போன்ற வசைமாரி பொழிவதை விடுத்து ஆரோக்கியமாகச் செயற்பட வேண்டும் என்றார்.

சமூக நலன்களில் அக்கறையும் அவதானிப்பும் கொண்ட பலர் இத் தீர்ப்பை வரவேற்றுள்ளனர். சமூக ஊடகங்களில் தான்தோன்றித்தனமாக எழுதி தமது வக்கிர புத்தியைக் காட்டிக் கொள்வோருக்கு சிறந்ததொரு படிப்பினையை வழங்கியுள்ள திரு அஜித் அவர்களுக்கு வாழ்த்துக்கள்.

# சுமந்திரனின் தேவை

பாராளுமன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கில் தேசிய மக்கள் சக்தியின் வியக்கத்தக்க வெற்றிக்கு அடுத்ததாக கவனத்தை ஈர்த்த நிகழ்வு என்றால் அது இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரனின் தோல்வியேயாகும்.

தமிழ் அரசுக் கட்சியே இலங்கை தமிழ் மக்களின் பிரதான அரசியல் இயக்கம் என்பதால் அவர்கள் வழமைபோன்று தங்களுக்கே வாக்களிப்பார்கள் என்ற உறுதியான நம்பிக்கையில் சுமந்திரன் தனது வெற்றியில் நம்பிக்கை கொண்டவராக இருந்தார். ஆனால் தோல்வியை தவிர்க்க முடியாத அளவுக்கு நிலைவரங்களில் மாற்றம் ஏற்பட்டு விட்டது. கணிசமான காலமாக ஏனைய தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் மாத்திரமல்ல, தமிழ் அரசு கட்சிக்குள் பலரும் கூட சுமந்திரனுக்கு எதிரான பிரசாரங்களை தீவிரப்படுத்தி வந்தனர் என்பது சகலருக்கும் தெரியும்.

தமிழ்க் கட்சிகளுக்கு வேறு விடயங்களில் ஒற்றுமை இல்லாவிட்டாலும் சுமந்திரனுக்கு எதிரான நிலைப்பாட்டில் அவை ஒருமித்து நின்றன. தாங்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவாகாவிட்டாலும் பரவாயில்லை, சுமந்திரன் தேர்தலில் தோற்றால் அதுவே தங்களுக்கு பெரிய வெற்றியாக இருக்கும் என்ற தோரணையில் பல தமிழ் அரசியல்வாதிகளின் பேச்சுக்களும் செயல்களும் அமைந்திருந்தன என்பது ஒன்றும் இரகசியமானது இல்லை. வடக்கில் இருந்து புதிய பாராளுமன்றத்துக்கு செல்பவர்களில் சுமந்திரனுக்கு இணையான பங்களிப்பைச் செய்யக் கூடியவர் என்றால் அவர் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மாத்திரமே.

ஆனால், அவரின் கோட்பாட்டுப் பிடிவாதம் பாராளுமன்ற விவகாரங்களில் பரவலான விவகாரங்களில் அவர் பங்களிப்புச் செய்வதற்கு இடையூறாக இருப்பது துரதிர்ஷ்டவசமானது. கோட்பாட்டு உறுதியுடனான 'சமகாலத்தில் நடைமுறைச் சாத்தியமில்லாத' சில அடிப்படைக் கோரிக்கைகளை முன்வைத்து அவற்றை ஏற்றுக்கொள்வதாக உறுதியளித்தால் மாத்திரமே கொழும்பு அரசாங்கத்துடன் அரசியல் தீர்வு தொடர்பில் பேசுவது குறித்து பரிசீலிக்க முடியும் என்ற பொன்னம்பலத்தின் நிலைப்பாட்டு தென்னிலங்கை அரசியல் சமுதாயத்துக்கு ஏற்புடையதாக இருக்காது. இந்த இடத்தில்தான் சுமந்திரனின் தேவையின் முக்கியத்துவம் உணரப்படுகிறது.

தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளைச் சமரசம் செய்யாமல் தென்னிலங்கை அரசியல் சமுதாயத்துடன் சமகால உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் சூழ்நிலைக்கு பொருத்தமான முறையில் தென்னிலங்கையுடனும் சர்வதேச சமூகத்துடனும் ஊடாட்டங்களைச் செய்வதில் மிகவும் இராஜதந்திரமான அணுகுமுறை ஒன்றை சுமந்திரன் கடைப்பிடித்து வந்திருக்கிறார். அவரின் தோல்வியை இன்றைய தமிழர் அரசியலுக்கு ஒரு பின்னடைவு என்று நிதானமாகச் சிந்திக்கும சிங்கள அரசியல்வாதிகளில் பலரும் கூட உணருகிறார்கள். சுமந்திரனின் இந்த அணுகுமுறை அவருக்கு ஆதரவாளர்களையும் எதிரிகளையும் சமஅளவில் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறது.

தேர்தல் தோல்விக்கு பின்னரும் கூட தொடர்ந்தும் அரசியலில் ஈடுபடப் போவதாக அறிவித்திருக்கும் சுமந்திரன் புதிய அரசியல் சூழ்நிலையில் தனது பங்களிப்பு குறித்து தெளிவாக வரையறுத்துக் கொள்ள வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கிறார். 'நல்லாட்சி' அரசாங்க காலத்தில் முன்னெடுக்கப்பட்டு இடைக்கால அறிக்கையுடன் நடுவில் நின்று போன புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை நிறைவு செய்யப் போவதாக ஜனாதிபதி திஸநாயக்க நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கியிருக்கிறார்.

அந்த செயன்முறைகளில் பயனுறுதியுடைய துடிப்பான பங்களிப்பைச் செய்த சுமந்திரன் பாராளுமன்றத்தில் இல்லா விட்டாலும் தொடர்ந்தும் தனது நிபுணத்துவத்தையும் சேவையையும் வழங்க முடியும். புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைகள் முன்னெடுக்கப்படும் போது சுமந்திரன் நிச்சயமாக ஒரு முக்கியத்துவம் வாய்ந்த வகிபாகத்தைக் கொண்டிருக்க முடியும் என்று 'ஈழநாடு' உறுதியாக நம்புகிறது.

# தமிழீழம் எங்கும் கொட்டும் மழையிலும் இயற்கை சீற்றத்துக்கும் மத்தியிலும் மாவீரர்களுக்கு அஞ்சலி!



தாயகத்திற்காக போராடி வீரச் சாவடைந்த உறவுகளை உணர்வெழுச்சியுடன் நினைவு கூறும் வகையில் வடக்கு கிழக்கில் மாவீரர் நினைவு தினம் 27 நவம்பர் 2024 புதன்கிழமை கொட்டும் மழைக்கும் மத்தியில் மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டிருந்தது

கொட்டும் கடும் மழைக்கு மத்தியிலும், இயற்கை சீற்றத்தையும் பொருட்படுத்தாது தமிழர் தாயகப் பகுதியில் மாவீரர் தின நிகழ்வுகள் இடம் பெற்றிருந்தன. இந்நிலையில், மாவீரர்களுக்கு சுடர் ஏற்றப்பட்டு, கண்ணீரால் உறவினர்கள் அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இதேவேளை முதலாவது மாவீரர் சங்கரின் சொந்த வீடான வல்வெட்டித்துறையில் நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. மாவீரர் பண்டிதரின் தாய் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோர் ஈகைச் சுடரேற்றி நினைவேந்தல் நிகழ்வை ஆரம்பித்திருந்தனர்.

## யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் 27 நவம்பர் 2024 புதன்கிழமை மாலை இடம் பெற்ற மாவீரர் நாள் நிகழ்வில், பொதுச்சுடரை மூன்று மாவீரர்களின் தந்தை கந்தசாமி ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து ஏனைய தீபங்கள் ஏற்றப்பட்டு அக வணக்கம் செலுத்தி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

வல்வெட்டித்துறை தீருவில் மாவீரர் நினைவுத் திடலில் வீரவேங்கை சுதாவின் தந்தையார் பிரதான சுடரை ஏற்றிவைத்தார். வெள்ளத்துக்கு மத்தியில் ஆயிரக்கணக்கான மக்கள் இந்த நினைவேந்தலில் உணர்வு பூர்வமாக பங்கேற்றனர்.

## முல்லைத்தீவு

முள்ளிவாய்க்கால் துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள், முன்னாள் போராளிகள், பொது மக்கள் என பெருந்திரளானவர்கள் கொட்டும் மழைக்கு மத்தியிலும் உணர்வுபூர்வமாக ஒன்று திரண்டு உயரிய இலட்சியத்திற்காக தங்களின் இன்னுயிர்களை தியாகம் செய்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

முள்ளிவாய்க்கால் துயிலுமில்ல வளாகத்தில் மாலை 6.05 மணிக்கு மணியோசை எழுப்பப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டு பின்னர் பிரதான பொதுச் சுடர் மாவீரரின் தாயாரான வள்ளிபுரம் புஷ்பமலரினால் ஏற்றி வைக்க ஏனைய சுடர்களை மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் ஏற்றி வைக்கப்பட்டது.

தொடர்ந்து துயிலுமில்ல பாடல் ஒலி பரப்பாகியது. இதன் போது மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் கலந்து கொண்டவர்கள் மிகவும் அமைதியாக கண்ணீர் மல்க மாவீரர்களை நினைவு கூர்ந்ததுடன் பெருந்திரளான பொதுமக்கள் உணர்வெழுச்சியுடன் கலந்து கொண்டு அஞ்சலியினை செலுத்தி இருந்தனர்.

## வவுனியா

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவினால் மாவீரர் தின நினைவேந்தல் வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது மாவீரர்களின் தாயார் இருவரினால் ஈகைச் சுடர் ஏற்றி வைக்கப்பட்டதுடன், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மற்றும் பொதுமக்களால் மாவீரர்களின் நினைவுருவ படத்திற்கு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. வவுனியா– ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் உணர்வெழுச்சியுடன் நடைபெற்ற மாவீரர் நாள் வவுனியாவில் பிரதான மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள ஈச்சங்குளம் பகுதியில் 561 ஆவது இராணுவ தலைமையகம் அமைந்திருப்பதால் அதற்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் உணர்வெழுச்சியுடன மாவீரர் நாள் நிகழ்வு இடம் பெற்றது.

இதன் போது மணி ஒலிக்கப்பட்டு, ஈச்சங்குளம் துயிலும் இல்லத்தின் பிரதான ஈகைச்சுடரினை இரு மாவீரர்களின் தாயாரான பாலசிங்கம் பாக்கியம் அவர்களால் ஏற்றி வைக்கப்பட்டது. இதனையடுத்து நினைவேந்தலில் கலந்து கொண்ட மாவீரர்களின் பெற்றோர்களால் சுடர் ஏற்றி நினைவேந்தல் அனுஸ்டிக்கப்பட்டுள்ளது. கண்ணீர் மல்க, மலர் தூவி, சுடரேற்றி உணர்வு பூர்வமாக உயிரிழந்த வீரர்களுக்கும் தமது உறவுகளுக்கும் அஞ்சலி செலுத்தியிருந்தனர். இதில் பல ஆயிரக்கணக்கான பெற்றோர்கள், உறவினர்கள் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் கலந்து கொண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

## கிளிநொச்சி

கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் லெப்கேணல், மகேந்தி, லெப். கேணல் சூட்டி உள்ளிட்ட 3 மாவீரர்களின் தந்தை பொதுச் சுடரை ஏற்றி வைத்தார். பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்த நிகழ்வில் உணர்வு பூர்வமாக பங்கேற்றனர்.

## மட்டக்களப்பு

தமிழர்கள் இந்த நாட்டில் சுயநிர்ணய உரிமையுடன் ஏனைய இனங்கள் போன்று சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காக தன்னுயிர்களை தியாகம் செய்த விடுதலை வீரர்களை நினைவு கூரும் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் கொட்டும் மழையிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உணர்வு பூர்வமாக நரடைபெற்றது.

மட்டக்களப்பு வாகரை கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாலை மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமாக நடைபெற்றது. பெருமளவான மாவீரர்களின் உறவினர்களின் பங்குபற்றுதலுடன் இந்த நிகழ்வு நடைபெற்றது.

சரியாக 6.10 மணியளவில் பிரதான சுடர் ஏற்றப்பட்டு மாவீரர் இசை இசைக்கப்பட்டதுடன் நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

தற்போது நிலவி வருகின்ற வெள்ள அனர்த்த நிலமைக்கு மத்தியில் மட்டக்களப்பு மாவடிமுன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் உறவினர்கள், உள்ளிட்ட பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு ஈகைச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மாவடி முன்மாரி மாவீரர் துயிலுமில்லத்தில் அதிகளவான மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள், உள்ளிட்ட பலரும் இதன் போது கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

மாவடிமுன்மாரி துயிலும் இல்லத்தில் 2ஆம் லெப்பினட் தங்கநிலா என்பவரின் தாயார் கிருஷ்ணபிள்ளை புண்ணியவதி பொதுச்சுடர் ஏற்றினார். தொடர்ந்து இரண்டாயித்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் மாவீரர்களின் பெற்றோர் கலந்துகொண்டு தீபங்களை ஏற்றி அஞ்சலி செய்தனர்.

## அம்பாறை

அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நினைவேந்தல் நடைபெற்றது. மாலை 6.05 நிமிடத்தில் மாவீரர்களுக்கான பொதுச் சுடர் ஏற்றி நினைவேந்தல் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் மாவீரர் நினைவேந்தலை அனுஷ்டிக்க அங்கு சென்ற மக்களிடம் பொலிஸார் பாதுகாப்பு கெடுபிடிகளை விதித்து அங்கு செல்வதை தடுக்க முயன்றனர். அத்துடன் அங்கு சென்ற வாகனங்களின் நம்பர் பலகைகள் பொலிஸாரினால் பதியப்பட்ட பின்னர் குறித்த மாவீரர் துயிலும் இல்லத்திற்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர். அங்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடனும் பொலிஸார் முரண்பட்டதுடன் அங்கு சிறு பதற்ற நிலையும் ஏற்பட்டது.



அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒரேயொரு மாவீரர் துயிலும் இல்லம் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள கஞ்சிகுடிச்சாறு பிரதேசத்தில் அமைந்துள்ளது. அம்பாறை மாவட்டத்தில் 700க்கும் மேற்பட்ட மாவீரர்களின் நினைவுச்சுடர்கள் இங்கு நிறுவப்பட்டுள்ளன.

## திருகோணமலை

சம்பூர் ஆலங்குளம் மாவீரர் நாள் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினால் சம்பூர் ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வு மிகவும் உணர்வுபூர்வமான முறையில் இடம் பெற்றது.

இதன்போது மாலை 6.05 மணிக்கு மணியோசை எழுப்பப்பட்டு பொதுச் சுடர் ஏற்றும் நிகழ்வு இடம்பெற்றது. பொதுச் சுடரை மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் ஏற்றி வைத்தார். சீரற்ற காலநிலையினையும் பொருட்படுத்தாது பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்கள். இதன் போது தமிழர்களின் விடிவிற்காக உயிர் தியாகம் செய்த மாவீர்கள் விதைக்கப்பட்ட கல்லறைகள் மீது அவர்களது உறவினர்கள் மலர்தூவி, விளக்கேற்றி அஞ்சலி செலுத்தியதுடன் கண்ணீர் மல்கி கதறி அழுது தமது கவலைகளையும் ஆதங்கங்களையும் வெளிப்படுத்தியதை காண முடிந்தது.

## மன்னார்

மாவீரர் தினத்தையொட்டி மன்னார் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்க விட்டு உணர்வுபூர்வமாக மாவீரர் நினைவு தினம் புதன் கிழமை (27) மாலை நினைவு கூரப்பட்டது. ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழுவினால் நினைவேந்தல் ஏற்பாடு செய்யப்பட்டது.

தமிழ் தேசிய விடுதலைக்காக தம் உயிரை தியாகம் செய்த இரு மாவீரர்களின் தந்தை ஒருவர் பொதுச் சுடரை ஏற்றி எழுச்சி பூர்வமாக நினைவேந்தலை ஆரம்பித்து வைத்தார். ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் உறவினர்கள் பெருந்திரளான மக்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் என ஆயிரக்கணக்கானவர்கள் ஒன்று திரண்டு கண்ணீர் மல்க உணர்வுபூர்வமாக மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்

# தமிழ் அரசியலில் ஒரு மிஸ்டர் பீன்ஸ்

தொடக்கத்திலிருந்தே அர்ஜுனா சர்ச்சைகளின் மையமாக இருந்தார். சர்ச்சைகள் தான் அவரை வைரல் ஆக்கின. சர்ச்சைகள் தான் அவரை பிரபல்யம் ஆக்கின. சர்ச்சைகள் தான் அவருடைய அரசியல் பிரவேசத்துக்கான முதலீடு.

அரசியலில் மிகக் குறுகிய காலத்துக்குள் எழுச்சி பெற்றவர் அவர். இப்போதுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களில் அதிகம் ஊடகக் கவனிப்பை பெற்ற ஒருவராக குறிப்பாக, சமூக வலைத்தளங்களில் எப்பொழுதும் குவிமையப்படுத்தப்படும் ஒருவராக அவர் தான் காணப்படுகிறார்.

ஏனென்றால் அவர் ஒவ்வொரு நாளும் எதையாவது வில்லங்கமாகச் செய்து விடுகிறார். பின்னர் அதை அவரே பெருமிதமாகப் பகிரவும் செய்கிறார். அவருக்கு இப்பொழுது கிடைக்கும் ஊடக கவர்ச்சி நெகட்டிவானது. ஆனால் அவர் அதை ரசிக்கிறார். கிட்டத்தட்ட சுமந்திரனும் தமிழரசிய



லில் அப்படி ஒரு நெகட்டிவ் கவர்ச்சியைத் தான் அதிகமாகப் பெற்றார். அதன் மூலமே தமிழரசியலில் எப்பொழுதும் பேசப்படும் ஒருவராக விளங்கினார். இப்பொழுது அர்ஜுனா.

அர்ஜுனா நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டதிலிருந்து அவரையும் கிண்டல் செய்து அவரைத் தெரிவு செய்த யாழ்ப்பாணத்தவர்களையும் கிண்டல் செய்து விமர்சனங்கள், மீம்ஸ்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவரைப் போன்ற ஒருவரை நாடாளுமன்றத்திற்கு அனுப்பியதன் மூலம் தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே தோற்கடித்து விட்டதாக, தமிழ் மக்களுக்குள் ஒரு பகுதியினர் கருதுவதாகத் தெரிகிறது.

ஆனால் உலகின் மிகப்பெரிய ஜனநாயகமும் உலகப் பேரரசும் ஆகிய அமெரிக்காவில் ஒரு ட்ரம்ப் தெரிவு செய்யப்படலாம் என்றால், ஏன் அர்ஜுனாவை யாழ்ப்பாணத்தவர்கள் தெரிவு செய்யக்கூடாது என்று கேட்டால் அதற்கு என்ன பதில்?

அமெரிக்க அரசுத் தலைவர் டிரம்ப்பும் ஒரு சர்ச்சைகளின் நாயகன் தான். வழமையான அரசுத் தலைவருக்குரிய பாரம்பரியங்களை அவர் பெருமளவுக்கு கட்டுடைக்கின்றார். ஒரு அரசுத் தலைவர் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற பவித்திரமான வரையறைகளை உடைத்துக் கொண்டு அவர் வெளியே வருகிறார். உலகப் பேரரசு ஒன்றின் தலைவர் எப்படி இருக்க வேண்டும் என்ற பொதுவான எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய வேண்டும் என்று அவர் வலிந்து நடிப்பதில்லை. சில சமயங்களில் அவர் ஆங்கிலத் திரை உலகின் நகைச்சுவை நாயகன் மிஸ்டர் பீன்சை ஞாபகப்படுத்துவார்.

மிஸ்டர் பீன்ஸ் மேற்கத்திய பண்பாட்டின் நடுத்தர வர்க்கத்தின் நவநாகரீக பிம்பங்களை உடைப்பவர். டீசன்ட் என்று கருதப்படும் விடயங்களில் வழமைக்கு மாறாக நடப்பது தான் அவருடைய வழமை.

நவ நாகரிக நடுத்தர வர்க்கமும் மேட்டுக் குடியும் எதையெல்லாம் டீசன்ட் என்று கருதுகின்றனவோ, பாதுகாக்கின்றனவோ, அவற்றையெல்லாம் மிஸ்டர் பீன்ஸ் கேள்விக்கு உள்ளாக்குவார் சிரிக்கத் தக்கவையாக்குவார். அல்லது சிரிப்புக் கிடமாக்குவார். அவர் நவநாகரீக உலகின் புனிதங்களை உடைப்பார். பௌத்திரமான வரையறைகளை உடைப்பார். மிஸ்டர் பீன்ஸைப் பார்த்துச் சிரிப்பவர்கள் தங்களைத் தாங்களே பார்த்துச் சிரிப்பவர்கள் தான். தங்களுக்குள் இருக்கும் நடுத்தர வர்க்க சுபாவத்தை சுயவிமர்சனம் செய்து கொள்பவர்கள் தான்.

அர்ஜுனாவின் நடவடிக்கைகளிலும் அந்தப் பண்பு உண்டு. அவர் எதையுமே சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை. யாரையுமே சீரியஸ் ஆக எடுத்துக் கொள்ளவில்லை. எதுவெல்லாம் சீரியஸ் ஆனவையாக , டீசன்ட் ஆனவையாக இங்கிதமானவையாகக் கருதப்படுகின்றனவோ..அவற்றையெல்லாம் அவர் கட்டுடைக்கின்றார். அவற்றையெல்லாம் அவர் வேடிக்கையாகுகின்றார். அவர் எதிலுமே ஒளிவு மறைவு இல்லாதவர் போல தன்னை வெளிப்படுத்துகிறார். தன் தவறுகளையும் தன் வாயாலே சொல்கிறார். அவருடைய சொந்த வாக்குமூலங்களே எதிர் காலத்தில் அவருக்கு எதிராகத் திரும்ப முடியும். ஆனால் அவர் தன்னைத் தானே தற்காத்துக் கொள்ளத் தெரியாத அல்லது தற்காத்துக் கொள்ள முடியாத ஒரு பிரபல்யம்.

ஐரோப்பாவில் வசிக்கும் ஒரு நண்பர் என்னிடம் கேட்டார், இவருடைய வேடிக்கையான நடவடிக்கைகள் அவருடைய அடிப்படை இயல்பா? அல்லது அவர் வேண்டுமென்று அவ்வாறு நடிக்கின்றாரா? என்று. ஏன் அவர் நடிக்க வேண்டும்? என்று கேட்டேன். அவர் கண்டபடி எதிரிகளைச் சம்பாதித்துக் கொள்கிறார். எனவே அந்த எதிரிகளிடமிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கு ஒரு கோமாளி வேடத்தை அவர் பூண்டிருக்கலாம் அல்லவா? என்று கேட்டார்.

நான் சொன்னேன், அவர் நடிக்கவில்லை அது தான் அவருடைய இயல்பு. இயல்பாக இருப்பது தான் அவருடைய பலமும் பலவீனமும். அவர் நேரலையில் எப்பொழுதும் இயல்பாகத் தோன்றுகிறார். கமராவுக்கு முன் நிற்கிறேன் என்பதற்காக நடிக்கவோ அல்லது இறுக்கமாக, சீரியஸாகத் தன்னை காட்டவோ அவர் முயல்வதில்லை. அதை வெளிப்படைத் தன்மையாக ஏற்றுக் கொள்பவர்கள் அவரை ஆர்வத்தோடு பார்க்கின்றார்கள்.

தமிழரசியலின் சீரியசான, இறுக்கமான, சிரிப்புக் குறைந்த பண்பில் இருந்து முற்றிலும் வேறுபட்டு அவர் நிற்கிறார். எல்லாவற்றையுமே சிரிப்பாக்குகிறார். தானும் ஒரு சிரிப்புப் பொருளாக மீம்சாக மிஸ்டர் பீன்சாகத் தோன்றுகிறார்.

பத்தாவது நாடாளுமன்றத்தில் தொடக்க அமர்விலேயே அவர் எங்களைச் சிரிக்க வைத்து விட்டார். தொடக்கமே பரபரப்புத் தான். அர்ஜுனா நாடாளுமன்றத்துக்கு ஒரு அதிர்ச்சி. அவர் நாடாளுமன்றத்தையும் அது புனிதம் என்று கருதும் நடைமுறைகளையும் அபத்தமாக்கி விட்டார். தமிழ் மக்களின் கடந்த சுமார் 75 ஆண்டு கால அனுபவத்தின்படி நாடாளுமன்றத்துக்குள்ளால் மீட்சி கிடைக்கப் போவதில்லை.

நாடாளுமன்றம் தான் தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்புச் சட்டங்களை நிறைவேற்றியது. ஜிஜி பொன்னம்பலத்தில் தொடங்கி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வரையிலும் மூன்று தலைமுறைகளின் காலப்பகுதிக்குள் ஆற்றப்பட்ட எல்லா உரைகளும் ஹன்சாட்டில் பதிவு செய்யப்பட்டதற்கு மப்பால் ஊடகங்களில் தலைப்புச் செய்தியாக வெளிவந்ததற்குமப்பால் தமிழ் மக்களுக்கு திருப்தியான பாதுகாப்பான எதையுமே பெற்றுத் தரவில்லை. நாடாளுமன்றத்தை ஒரு அபத்த மேடையாக மாற்றிய சிங்கள



பௌத்த அரசியல் பாரம்பரியத்துக்கு தமிழ் மக்கள் கொடுத்த ஒரு தண்டனையாக அர்ஜுனாவைக் கருத வேண்டும் என்று ஒரு நண்பர் முகநூலில் எழுதியிருந்தார்.

அர்ஜுனாவின் வெற்றியும் தோல்வியும் அவர் இறுக்கமின்றி இயல்பாகத் தோன்றுவது தான். அவருடைய வெளிப்படைத் தன்மை தான். அவர் தன்னைத் தற்காத்துக் கொள்ளாமல் எதிரிகளைச் சம்பாதிக்கிறார். தன்னை தற்காத்துக் கொள்ளாமல் நேரலையில் வருகிறார். தன்னைத் தற்காத்துக் கொள்ளாமல் கண்டபடி கதைக்கிறார். நீதிக்காகப் போராடும் ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியிலிருந்து, அவ்வாறு தற்காப்புணர்வற்ற ஒருவர் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

அதற்கு முதலாவது பிரதான காரணம், அவர் ஒரு மருத்துவராக இருந்து கொண்டு மருத்துவத்துறைக்கு எதிராக விமர்சனங்களை முன்வைத்தமை. அதனால் ஏற்பட்ட பாதிப்புகளை எதிர் கொண்டமை.

இரண்டாவது காரணம், தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் தலைமைத்துவ வெற்றிடம். தங்களுடைய உடனடிப் பிரச்சினைகளைப் பேச வல்ல, தங்களுடைய வெறுப்பையும் எதிர்ப்பையும் வெளிக்காட்டவல்ல தலைவர்களுக்காகத் தமிழ் மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஏக்கத்தின் விளைவாகவே அர்ஜுனா வெற்றி பெற்றார்.

மூன்றாவது காரணம், சமூக வலைத் தளங்களின் பெருக்கமும் யூட்யூப்களின் பெருக்கமும். செய்தி இப்பொழுது பணம். பரபரப்பு இப்பொழுது பணம். யூடியுப்கள் பார்வையாளர்களை எப்படி அதிகப்படுத்தலாம், வருமானத்தை எப்படிக் கூட்டலாம் என்று தான் அதிகமாகச் சிந்திக்கின்றன. இதில் தேசத்தைக் கட்டியெழுப்பும் யூடியுப்கள் எத்தனை? இப்படிப்பட்டதோர் ஊடகச் சூழலும் அர்ஜுனாவை வீங்கச் செய்தது. சமூக வலைத்தளங்கள் ஊதிப் பெருப்பித்த ஒரு பலூன் அவர்.

நாலாவது காரணம், அவருடைய வெளிப்படைத் தன்மை, இறுக்கமில்லாத அப்பாவித்தனமான வெளிப்படைத்தன்மை. தமிழ்த் தேசிய அரசியலின் சீரியஸான.இறுக்கமான, சிரிப்பில்லாத பண்புக்கு எதிராக அர்ஜுனா சீரியஸான எல்லாவற்றையுமே சிரிப்புக்கிடமாக மாற்றுகிறார். அதுவும் அவருக்குக் கவர்ச்சியைக் கொடுத்தது.

பத்தாவது நாடாளுமன்றம் அவரை எவ்வளவு காலத்துக்குச் சகித்துக் கொள்ளும் என்பதனை பொறுத்திருந்து பார்க்க வேண்டும். ஆனால் கடந்த 15 ஆண்டுகளிலும் தமிழ் மக்கள் தென்னிலங்கை மையக் கட்சி ஒன்றுக்கு கணிசமான அளவுக்கு நேரடியாக வாக்களித்திருக்கும் ஒரு பின்னணிக்குள், தமிழ்த் தேசியப் பிரதிநிதித்துவம் கடந்த நாடாளுமன்றத்தை விடவும் இந்த முறை மேலும் இரண்டு ஆசனங்களால் குறைந்து போயிருக்கும் ஒரு பின்னணிக்குள், அதாவது சீரியசான, பின்னடைவான ஓர் அரசியல் சூழலுக்குள், தமிழ் மக்களின் இறுக்கத்தைத் தளர்த்தி, எல்லாவற்றையும் சிரித்துக் கடக்கும் ஒரு அனுபவத்தைத் தர ஒரு மிஸ்டர் பீன்ஸ் கிடைத்திருக்கிறாரா? சிரிப்போம். கடப்போம்.

– நிலாந்தன் –

## புதிய பாராளுமன்றத்தின் கொள்கை விளக்கவுரையில் ஜனாதிபதி அநுரகுமார

(5ம் பக்கத் தொடர்ச்சி) உருவாக்கப் போவதாக உறுதியளித்திருக்கும் ஒரு ஜனாதிபதியிடமிருந்தாவது தங்களது நீண்டகாலப் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கக்கூடும் என்று அவர்கள் நம்பித் தான் தங்களை பிரதிநிதித்துவப்படுத்திய பழைய தலைவர்களையும் அரசியல் கட்சிகளையும் நிராகரித்திருக்கிறார்கள். இனவாத அரசியலும் மதத்தீவிரவாத மும் மீண்டும் தலையெடுக்காமல் இருக்கவேண்டும் என்றால் அதே இனவாதமும் மதவாதமும் தோற்றுவித்த பிரச்னைகளுக்கு நிலைபேறான தீர்வுகளை சிறுபான்மைச் சமூகங்களின் நியாய பூர்வமான அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய தீர்வுகளைக் காண வேண்டும் என்பதை நாம் சொல்லித்தான் ஜனாதிபதி தெரிந்துகொள்ள வேண்டும் என்று இல்லையே!

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**

**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**

**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**

**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**

**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**

**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**

**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**

**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

16 நவம்பர் 2024 - 29 நவம்பர் 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி புஸ்பராணி இராமச்சந்திரன்

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டி ருந்த திருமதி புஸ்பராணி இராமச்சந்திரன் அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் 16 நவம்பர் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.. திருமதி புஸ்பராணி இராமச்சந்திரன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 25வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கிருஷ்ணபிள்ளை இலட்சுமி

பேராலை பளைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணபிள்ளை இலட்சுமி அவர்களது 25வது ஆண்டு நினைவு தினம் 21 நவம்பர் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கிருஷ்ணபிள்ளை இலட்சுமி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### பேராசிரியர் பூபதி கதிர்காமநாதன்

யாழ்.குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை வாழ்விடமாகவும் கொண்டிருந்த பேராசிரியர் பூபதி கதிர்காமநாதன் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 24 நவம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள் பேராசிரியர் பூபதி கதிர்காமநாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு கந்ததாசன் சிவபாதம்

சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கந்ததாசன் சிவபாதம் அவர்களது 31ம் நாள் நினைவு நாள் 19 நவம்பர் 2024 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு கந்ததாசன் சிவபாதம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம்

யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த யாழ்.இந்துமகளிர் கல்லூரி ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 17 நவம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 30வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சடாச்சரசுந்தம் கந்தசாமி

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சடாட்சரசுந்தரம் கந்தசாமி அவர்களது 30வது ஆண்டு நினைவு தினம் 29 நவம்பர் 2024 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சடாட்சரசுந்தரம் கந்தசாமி அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



16 நவம்பர் 2024 சனிக்கிழமை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி புஸ்பராணி இராமச்சந்திரன் அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




17 நவம்பர் 2024 ஞாயிறுக்கிழமை யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



19 நவம்பர் 2024 செவ்வாய்க்கிழமை சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கந்ததாசன் சிவபாதம் அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



19 நவம்பர் 2024 செவ்வாய்க்கிழமை கனடாவை வாழ்விடமாகக் கொண்டிருக்கும் திரு விஜயரெத்தினம் சாந்தகுமார் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு விஜயரெத்தினம் சாந்தகுமார் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



20 நவம்பர் 2024 புதன்கிழமை மட்டுவில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பாபிள்ளை வன்னியசிங்கம் அவர்களது 23வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



19 நவம்பர் 2024 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி கீர்த்தனா பேரின்பமூர்த்தி அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக செல்வி கீர்த்தனா பேரின்பமூர்த்தி அவர்கள் தனது பெற்றோர் உறவுகளுடன் இணைந்து 20 நவம்பர் 2024 புதன்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




20 நவம்பர் 2024 புதன்கிழமை மட்டுவில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி மகேஸ்வரி வன்னியசிங்கம் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



21 நவம்பர் 2024 வியாழக்கிழமை பேராலை பளையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணபிள்ளை இலட்சுமி அவர்களது 25வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



22 நவம்பர் 2024 வெள்ளிக்கிழமை கனடாவை வாழ்விடமாகக் கொண்டிருக்கும் திருமதி தேவிகா செல்வராஜா அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி தேவிகா செல்வராஜா அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



24 நவம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஸ்ரீகுமார் ரோகினிதேவி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அட்சயன் ஸ்ரீகுமாரின் 18வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் அட்சயன் தனது பெற்றோர், உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



24 நவம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமை குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை வாழ்விடமாகவும் கொண்டிருந்த பேராசிரியர் பூபதி கதிர்காமநாதன் அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



25 நவம்பர் 2024 திங்கட்கிழமை கனடாவில் வாழும் திரு திருமதி சற்குணலிங்கம் கௌரி தம்பதிகளின் செல்வப்புதல்வி ராணுஜா சற்குணலிங்கம் அவர்களின் பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக செல்வி ராணுஜா தனது பெற்றோர்களுடன் இணைந்து 26 நவம்பர் 2024 செவ்வாய்க்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



27 நவம்பர் 2024 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி சையந்தவி ரமணனின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி சையந்தவி ரமணன் அவர்கள் தனது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



29 நவம்பர் 2024 வெள்ளிக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சடாச்சரசுந்தரம் கந்தசாமி அவர்களது 30வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



20 நவம்பர் 2024 புதன்கிழமை வலந்தலை காரைநகரைப் பிறப்பிடமாகவும் வெளிக்குளம் வவுனியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கைலாசபிள்ளை பாலசுப்பிரமணியம் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

உ
ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

# அருள்மிகு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 Canada Tel: 416-321-6104 Fax: 416-321-7557 www.ayyappan.ca
Facebook: Canada Sri Ayyappan Hindu Temple

## மண்டல மகர விரத விஞ்ஞாபனம்






## ஐயப்பன் மாலை அணியும் வைபவம்
## 16-11-2024 சனிக்கிழமை

ஐயப்பன் மெய்யடியார்களே!

ஸ்காபரோ 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 16.11.2024 சனிக்கிழமை அதிகாலை 7.00 மணிக்கு கணபதி ஹோமம். தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 8.30 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும்.

மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும்.

அடியார்கள் புனிதமான ஐயப்பன் மகரமண்டல விரதகாலத்தில் பக்திசிரத்தையுடன் காலை, மாலை நடைபெறும் ஐயப்ப பூஜை விழாக்களில் கலந்து கொள்வதுடன் முடிந்த வரை மண்டலபூஜை உபயங்களைப் பொறுப்பேற்றுச் சிறப்பித்து ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அழைக்கின்றோம்.

*முக்கிய குறிப்பு: கைத்தொலைபேசியை ஆலயத்தினுள் பாவிக்க வேண்டாம்

## MANDALA MAKARA VIRATHAM AND AYYAPPAN SACRED THULASI MALAI WEARING FESTIVAL

**Mandala Makara Viratha & Sacred Thulasi Mala Wearing Festival shall be held at canada Sri Ayyappan Hindu Temple, on Saturday, November 16, 2024 Starting with Ganapathy Homam at 7.00am, followed by Sastha Homam and Thulasi Mala Wearing from 8.30am to 8.00pm.**



*Note: Please don't use phones inside the TEMPLE

*இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர்சபை*

# நெஞ்சம் நிறைந்த மதி அண்ணாவை அவலச் சாவு காவு கொண்டது!



மதி. மதி அண்ணர் என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட மதிகுடி குலோத்துங்கம் அவர்கள் 20 நவம்பர் 2024 இரவு 11.00 மணியளவில் அவலச் சாவினைத் தழுவிக் கொண்டார் என்பதை நெஞ்சு நிறைந்த துயரத்தோடும் துக்கத்தோடும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

எனக்கும் மதி அண்ணருக்கும் இடையிலான உறவு 40 ஆண்டுகள். 1983 ஆரம்ப காலங்களில் அங்கொன்றும் இன்னொன்றுமாக விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நாம் செயற்பட ஆரம்பித்த காலத்தில் வன்கூவரில் இருந்து ரொறன்ரோவுக்கு இடம் பெயர்ந்த மதி அண்ணரும் கனடாவுக்கு குடி பெயர்ந்த நண்பர் அசோகன் அவர்களும் எம்மோடு இணைந்து கொண்டார்கள்.

அன்றைய காலகட்டத்தில் அனைத்து இயக்க ஆதரவாளர்களும் போட்டி போட்டு கொண்டு இயங்கி வேளையில் மதி அண்ணரும் அவருடன் இணைந்து நண்பர் அசோகன். தவம் போன்றோரும் இரவு பகல் பாராது இடையறாதும் தடையறாதும் பணியாற்றினோம்.

எங்கள் எல்லோரையும் விட மதி அண்ணரிடம் ஒரு பிரத்தியேகக் குணம் இருந்தது. அது தான் அனைவரையும் அன்போடுகக் கதைத்து பகை உணர்வை வளர்க்காது இயக்கப் பணியாற்றியமையாகும். அதற்காக அவர் ஓர் பசுத்தோல் போர்த்திய புலி அல்ல. கொள்கையில் நிஜமாகவே அவர் புலி தான்.

இயக்கத்திற்கு பணியாற்றுகின்ற நண்பர்களுக்கு ஓர் பிரச்சனை என்றால் அந்த இடத்தில் எந்த நேரமென்றாலும் நிற்கின்ற முதல் ஆளாக மதி அண்ணர் அங்கு நிற்பார்.

கனடாவில் இயக்கத்தை கட்டுக்கோப்பான அமைப்பாக வளர்த்தெடுத்த பெருமை அவரையே சாரும். அவருடைய ஆளுமைகளுக்கு இரண்டு சம்பவங்களைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

ஒன்று சகோதர இயக்க மோதல்கள் நடைபெற்ற போது அந்த இயக்கங்களின் நண்பர்களதும் உறவுகளதும் வீடுகளுக்கு எங்களில் ஒரு சிலரை அழைத்துக் கொண்டு சென்று அவர்களுடன் ஆறுதலாக – அன்பாக உரையாடி தொடர்ந்தும் நட்புறவை வளர்த்த பண்பாளன் மதி அண்ணா.

இதேபோன்று 1984 அல்லது 1985களில் நியுயோர்க்கில் நடைபெற்ற ஈழத்தமிழர் மாநாட்டில் கலந்து கொண்டு விட்டு அண்ணர் அமிர்தலிங்கம் அவர்கள் கனடாவுக்கு வந்து தலைவர் சிவலிங்கம் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்ட ஒரு சிலர் கேள்விகள் கேட்டு குழப்ப முற்பட்ட பொழுது மதி அண்ணர் எழுந்து அவர்களை அமைதிப்படுத்திக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டம் முடிந்த பின்னர் என்னையும் நண்பர் அசோகனையும் அழைத்துக் கொண்டு அண்ணர் அமிர்தலிங்கம் தங்கியிருந்த திரு சிவலிங்கம் அவர்களது வீட்டிற்குச் சென்று அவர்களோடு உரையாடி மனமகிழ்ச்சியாகப் பேசி ஒன்றாக இரவு உணவு உண்டு திரும்பினோம். இந்த இரண்டு சம்பவங்களே போது மானவை அவருடைய ஆளுமையைப் புரிந்து கொள்ள.

விடுதலைப்புலிகள் ஆதரவுத் தளம் பெருகி அது உலகத்தமிழர் இயக்கமாக மாறிய பொழுது அதனது வளர்ச்சிக்கு ஓர் பத்திரிகை தேவை என்பதை உணர்ந்து உலகத்தமிழர் பத்திரிகையை ஆரம்பிக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்த நினைவுகளை எண்ணிப் பார்க்கின்றேன். அதே போன்று தமிழ்ச்சோலை வானொலியை ஆரம்பித்து அதனை நிர்வகிக்கும் பொறுப்பை நண்பர் அசோகனிடம் ஒப்படைத்தார்.

அந்த நேரத்தில் புதிதாக ஓர் சிறிய கார் ஒன்றை வாங்கி அதனை முழுமையாக இயக்கப் பணிக்காகவே பயன்படுத்தினார். அதே போன்று சில காலம் செல்ல நண்பர் அசோகன் ஓர் புதிய கார் ஒன்றை வாங்கி அரை மணித்தியாலம் இருந்து பின்னர் ஒரு மணித்தியாலமாக மாறிய தமிழ்ச் சோலைக்குரிய தகவல்களைக் கொண்டு 10 ஆண்டுகளுக்கு மேலாக ஓக்விலில் இருக்கும் வானொலி இயக்கத்திற்கு வாராந்தம் சென்று வருகின்ற நினைவுகள் நெஞ்சில் நிழலாடுகின்றன.

இன்று கனடிய மண்ணில் உலகத் தமிழர் இயக்கம் மாணவர் அமைப்பு, மகளிர் அமைப்பு இளையோர் அமைப்பு மாவீரர் அகவம் என்று விரிந்து பரந்து இருப்பதற்கு மூலவராக இருந்தவர்களில் மதி அண்ணர் குறிப்பிடத்தக்கவர்.

இன்றைய இளைய தலைமுறை தேசியத்தை நேசிப்பதில் கோபுரத்தின் கலசங்களாகத் திகழ்கின்றார்கள் என்றால் அதன் அத்திபாரமாக திகழ்ந்தவர்களில் மதி அண்ணர் முக்கிய மானவர்.

மதி அண்ணாவின் சடுதியான மறைவை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவரது நினைவுகள் நீண்டவை. அவரது தேசியத்துக்கான பணிகளும் நீண்டவை. அவை என்றும் நிலைத்திருக்கும்.

மதி அண்ணா! நூறாண்டு வாழ வேண்டிய நீங்கள் சடுதியாய் போய் விட்டீர்கள். இருந்தாலும் என்ன மரணம் பலரை மண்ணுக்குள் புதைக்கின்றது. நீங்கள் எங்கள் நெஞ்சங்களில் விதைக்கப்படுகின்றீர்கள். தேசியத்தை நேசிக்கும் உள்ளங்களில் முழு மதியாய் வாழ்வீர்கள். என்றும் நீங்கா நினைவுகளுடனும் நட்புடனும்

T.K.பரமேஸ்வரன் – ஈழநாடு

# மக்கள் பிரதிநிதிகளின் வரலாற்றுக் கடமை

- கௌடில்யன் -

பாராளுமன்ற தேர்தலில் வடகிழக்கில் தமிழரசுகட்சியில் மட்டக்களப்பில் ஒருவரை தவிர எனையவர்கள் ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பின்களாக அல்லது மாகாணசபை உறுப்பினர்களாக இருந்தவர்களென கூறலாமே அன்றி மக்களுக்கு பணியாற்றியவர்களென பெரிதாக கூற முடியாதுள்ளது

வழக்கம் போல வைகாசியில் முள்ளிவாய்கால் நிகழ்விலும் கார்த்திகை வந்தால் மாவீரர் தின நிகழ்விலும் தலைகாட்டி ஊடகங்களுக்கு பதிவு போட்டால் தங்களைத் தெரிவு செய்தவர்களுக்கும் மற்றும் புலம்பெயர்ந்து சென்று தமது தேர்தல் செலவுகளுக்கு கைகொடுத்தவர்களுக்குமான கடமையை நிறைவேற்றி விட்டோமென நினைத்து மிகுதி 363 நாட்களும் உட்கட்சி மோதலிலும் யார் பெரியவர் எனும் ஈகோ போட்டியிலும் சிக்கி மக்களை, அவர்களது அடிப்படை மற்றும் அத்தியாவசிய தேவைகள் பற்றி எதுவித சிந்தனையுமின்றி அடுத்த தேர்தலுக்கு நியமனப்பத்திரத்தில் தமது பெயர் வரக் கூடியவாறு செயற்படும் உட்கட்சி போட்டியே அவர்களுக்கு இதுவரை பிரதானமாக இருந்துள்ளது

வடகிழக்கின் ஈழப்போராட்டம் 2009ல் மௌனமாக்கப்பட்டதுடன்.2002ல் அதுவரை போராட்டத்தை காட்டிக் கொடுத்து துரோகிகளாக கருதப் பட்ட சகலரையும் மன்னித்து ஒன்றிணைத்து விடுதலைப்புலிகளால் உருவாகப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு தாங்கள் எதற்காக உருவாக்கப்பட்டோம், ஏன் மன்னிக்கப் பட்டோம் என்பதை மறந்து தடம் மாறி நடக்கத் தொடங்கி 22 பிரதிநிகள் இன்று 08 பேராக வந்த போதும் அதிலும் யாழ் கிளிநொச்சி மாவட்டங்கள் சேரந்த யாழ் தேர்தல் மாவட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட மக்களின் தமிழ் தேசியத்தின் மீதுள்ள பற்றின் காரணமாக ஒரேஒரு பிரதிநிதி தெரிவு செய்யப்பட்டுள்ள போதும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதற்கேற்ப நாட்டிலே மூன்றாவது எண்ணிக்கை பிரதிநிதிகளைக் கொண்ட வடகிழக்கின் பெரிய கட்சி என அறிக்கைமேல் அறிக்கைகள் வெளிவந்த வண்ணமுள்ளன

வட கிழக்கின் முழுவதுமான 31 பாராளுமன்ற பிரதிநிதிகளில் கிடைத்தது 07 அதனோடு தேசிய பட்டயலில் ஒன்று ஆனால் ஏன் மக்கள் எம்மை வெறுத்து புதிதாக வந்த வட கிழக்கில் கட்சி ரீதியாக எந்த கட்டுமானமுமற்ற ஒரு கட்சியின் அறிமுகமேயில்லாத வேட்பாளர்களுக்கு தமிழ் தேசியத்தை மறந்து வாக்களித்தார்கள் என்பதைப் பற்றி சுயவிமர்சனம் செய்யாமல் பழைய அதே பாதையில் நடக்க முயல்வதை காணக்கூடியதாகவுள்ளது

வட கிழக்கைப பொறுத்தவரை எட்டு மாவட்டங்ளில் ஒவ்வொன்றும் பிரத்தியேகமான பிரச்சனைகளை கொண்டுள்ளதோடு மக்களின் அடிப் படை அன்றாட தேவைகளும் வேறு பட்டவையாக உள்ளன யாழ் மாவட்டத்தை எடுத்து நோக்கினால் சுத்தி கரிக்கப்பட்ட குடிநீர்.விவசாய விதைகள் குறிப்பாக விதை உருளைக் கிழங்கு, விவசாய உற்பத்திகளுக்கான ஒழுங்கமைப்பட்ட சந்தை வசதிக் கான பொருளாதார மத்திய நிலையம், மீனவர்களுக்குரிய பிரச்சனைகளான இந்திய மீனவர்களின் அத்துமீறல் .நவீன மீன்பிடி கலங்கள் உபகரணங்கள் இவை அனைத்தோடும் இணைந்ததாக ஏற்றுமதியினை நோக்கமாக பெறுமதிசேர் உற்பத்திகள் இவற்றோடு மிகமுக்கியமாக வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை மையமாக்கிகொண்ட தொடர்பாடல் தொழிநுட்ப பட்ட மற்றும் பட்டப் பின் கற்கை நெறிகளுக்கான உயர் கல்விக்கூடங்கள் என இன்னும் பல உள்ளன

மேலும் கிளிநொச்சி.முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு மாவட்டங் களில் விவசாய அபிவிருத்தி குறிப் பாக நீரப்பாசன திட்டங்களை நவீன முறையில் புனரமைத்தல் .சுற்றாடலை விவசாய நடவடிக்கைகள மிகவும் பாதிக்கும் சட்டவிரோத மணல்அகழ்வு (மணல்கொள்ளை)

கால்நடைகளுக்கான மேய்ச்சல்தரை என பல அத்தியாவசிய அடிப்படை பிரச்சனைகள் உள்ளபோதும் இவை தொடர்பான சரியான புள்ளிவிபர அடிப்படையிலான தரவுகள் அவற்றினை அபிவிருத்தி செய்வதற்கான திட்டகள் எவையும் மக்கள் பிரதிநிதிகளிடம் இல்லையென்பதோடு இவற்றை தொகுத்தி ஆவணப்படுத்தி திட்ட முன்மொழிவுகளை தயாரிக்கக் கூடிய எமது வல்லுனர்களை அருகே கூட (16ம் பக்கம் பார்க்க)

# எப்போதையும் விட அதிக மக்கள் பணி புரிகிறார்கள்

ஒன்டாரியோவில் 2018இலிருந்து 800,000க்கும் மேற்பட்ட வேலைகள் அதிகரித்துள்ளன. முன்பை விட அதிக மக்கள் தங்கள் வீட்டிற்கு பெரும் ஊதியத்தை எடுத்துச் செல்கிறார்கள்.



**இவை எல்லாமே இங்கே நடக்கின்றன.**

ontario.ca/RebuildingOurEconomy
ஒண்டாரியோ அரசாங்கத்தின் நிதியுதவியுடன்

Ontario

# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# சீனத்தூதுவர் தமிழ் மக்களுக்கு சொல்லாமல் சொன்ன செய்தி?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



அண்மையில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்ச் சமூகம் ஒரு சரியான முடிவை எடுத்திருப்பதாகவே நான் கருதுகின்றேன் இவ்வாறு தெரிவித்திருப்பவர் இலங்கைக்கான சீனத் தூதர். இந்த வாரம் அவர் வடக்கு கிழக்குக்கு விஜயம் செய்தார்.

நடாளுமன்றத் தேர்தல் முடிந்த கையோடு தமிழர்களை நோக்கி வந்த முதலாவது வெளிநாட்டுத் தூதுவர் அவர். யாழ்ப்பாணத்தில் அவர் யாழ். ஊடக அமையத்துக்கு விஜயம் செய்து அங்கே ஒரு ஊடகச் சந்திப்பையும் நடத்தினார். ஒரு நாட்டின் தூதுவர் நாட்டின் ஒரு மாவட்டத்தில் உள்ள பிரஸ் கிளப்புக்கு தானாக வந்து ஊடகவியலாளர்களை சந்திப்பது என்பது பொதுவானது அல்ல. அதில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் சொன்ன பதில்களில் ஒன்று தான் மேலே உள்ளது. இனப்பிரச்சினைக்கு சீனா முன்வைக்கும் தீர்வு என்ன? என்று கேட்கப்பட்ட பொழுது அவர் மேற்கண்ட பதிலைச் சொன்னார்.

அந்த ஊடகச் சந்திப்பின் தொடக்கத்தில் அவர் பின்வருமாறு சொன்னார்.. இலங்கை வரலாறிலேயே முதற் தடவையாக தெற்கை மையப்படுத்திய கட்சியான என்பிபிக்கு தேசிய மக்கள் சக்திக்கு யாழ்ப்பாண மக்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்று. மேலும் தனது யாழ் விஜயத்தின் போது தான் பருத்தித்துறைக்குச் சென்றதாகவும் அங்கே, பல்வகைமைக்குள் ஒற்றுமையே சிறீலங்காவின் பலம் என்ற வாசகத்தைப் பார்த்ததாகவும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அந்த வாசகம் நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதாவது சீனா, என்பிபியின் வெற்றியை ஆர்வங் கலந்த எதிர்பார்ப்போடு பார்க்கின்றது. அந்த வெற்றியில் தமிழ்மக்கள் பங்காளிகளாக இணைந்திருப்பதை மிகவும் எதிர்பார்ப்போடு பார்க்கின்றது. இனப்பிரச்சனைக்கான தீர்வுக்குரிய அடிப்படைகளை அது பலப்படுத்தும் என்றும் சீனா கருதுவதாகத் தெரிகிறது. மேலும் முக்கியமாக என்பிபியின் வெற்றியானது சீனாவுக்கு சௌகரியமான ஓர் அரசியற் சூழலை ஏற்படுத்தியிருப்பதாக சீனா கருதுவதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில் சீனத் தூதர் சிவில் சமூக பிரதிநிதிகளையும் சந்தித்திருக்கிறார். இதில் முதலீட்டுத் துறையோடு ஈடுபாடுடையவர்கள், தொழில் முனைவோர் போன்றவர்கள் அதிகமாகக காணப்பட்டிருக்கிறார்கள். இதற்கு முன் யாழ்ப்பாணம் வந்திருந்த பொழுது இங்குள்ள கருத்துருவாக்கிகளையும் சந்தித்தார். அதில் சில கருத்துருவாக்கிகள் உரையாடலின் மையத்தை இனப்பிரச்சினையை நோக்கிக் குவித்தார்கள். இலங்கைத்தீவின் வளர்ச்சிக்கு சீனா எப்படி உதவ முடியும் என்ற உரையாடலில் இருந்த கவனக்குவிப்பு இனப்பிரச்சினை மீது மாற்றப்பட்டது. ஆனால் இம்முறை அவ்வாறான விவகாரங்களைத் தொடக்கூடிய கருத்துருவாக்கிகள் சந்திப்பில் தவிர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

சிவில் சமூகங்களை சந்தித்த பொழுது இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான கேள்விகளை சீனத் தூதுவர் பெருமளவுக்கு தவிர்க்க முயற்சித்திருக்கிறார். ஆனால் ஊடகச் சந்திப்பில் அவர் என்பிபியின் வெற்றிக்கு தமிழ் மக்கள் பங்களித்தமையை சிலாகித்துப் பேசியுள்ளார்.

சீனா மட்டுமல்ல, எம்பிபியின் மூத்த தலைவராகிய ரில்வின் சில்வா கூறுகிறார், வடபகுதி மக்கள் இனவாதத்தைப் புறக்கணித்து விட்டு தமக்கு வாக்களித்திருப்பதாக.

சட்டத்தரணி பிரதீபா மகாநாம என்பவர் கூறுகிறார், இனி வரும் காலங்களில் ஜெனிவாவில் தமிழர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று கூற முடியாது என்று.

விமல் வீரவன்ச கூறுகிறார், இனவாதம் மற்றும் பிரிவினைவாதத்திற்குத் தாம் எதிரானவர்கள் என்ற செய்தியை தமிழ் மக்கள் வழங்கியுள்ளதாக. ஒற்றை ஆட்சிக்குள் அனைத்து இன மக்களும் சம உரிமை கிட்டும் வகையிலான பயணத்தைத் தொடர வேண்டும் என்பதற்குரிய ஆணையே அதுவென்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

மேற்சொன்ன கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்தால் என்ன தோன்றுகிறது? என்பிபியின் வெற்றியை குறிப்பாக அதற்கு தமிழ்மக்கள் வழங்கிய ஆதரவை வைத்து இன முரண்பாடுகள் தணிந்து விட்டதாக அவர்கள் கருதுவதாகத் தெரிகிறது.




என்பிபிக்குக் கிடைத்திருக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்பது அசாதாரணமானது. அது மூவினத் தன்மை பொருந்தியது. ஆனால் அதன் பொருள் தமிழ் மக்கள் இந்த முறை மட்டும்தான் அவ்வாறு தெற்கில் உள்ள ஓர் அரசாங்கத்துக்கு ஆதரவளித்துள்ளார்கள் என்பதல்ல.

கடந்த 2015ல் ரணில் மைத்திரி கூட்டரசாங்கத்துக்கும் தமிழ் மக்கள் ஆதரவை வழங்கினார்கள். ஆனால் அந்த ஆதரவை அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாகவே வழங்கினார்கள். இந்தமுறை வித்தியாசம் என்னவென்றால், அவர்கள் நேரடியாக அரசாங்கத்துக்கே அந்த ஆதரவை வழங்கியது தான். இந்த வித்தியாசத்தைத் தான் சீனத் தூதர் எதிர்பார்ப்போடு பார்க்கிறாரா?

இம்முறை ஒரு தொகுதி தமிழ் வாக்குகள் என்பிபிஜ நோக்கிப் பெயர்ந்திருக்கின்றன. ஆனால் எனது கட்டுரைகளில் திரும்பத்திரும்பக் கூறப்படுவது போல, அவை இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் என்பிபி முன்வைத்த வாக்குறுதிகளுக்காக வழங்கப்பட்ட வாக்குகள் அல்ல. அவை தமிழ்த் தேசியக் கட்சிகளின் தோல்வியின் விளைவாக வெறுப்பும் சலிப்பும் அடைந்த மக்கள் வழங்கிய வாக்குகள் தான். அண்மையில் பிபிசி தமிழ்ச் சேவை தமிழ் மக்களைப் பேட்டி கண்ட பொழுது அது தெளிவாக வெளிப்பட்டது.

எனவே என்பிபிக்கு கிடைத்த வாக்குகள் இனப் பிரச்சினைக்கான தீர்வுக்காக வழங்கப்பட்ட மக்கள் ஆணை அல்ல. ஆனால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்பது அரசியலமைப்பை மாற்றத் தேவையான அடிப்படைகளில் ஒன்று. அந்த அடிப்படையில் சிந்தித்தால் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்தோடு ஒரு புதிய யாப்பை உருவாக்க என்பிபி தயாரா ?

இங்கு ஒரு முக்கியமான விடயத்தைச் சுட்டிக் காட்ட வேண்டும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை மட்டுமே இனப் பிரச்சினையைத் தீர்த்து விடாது. மாறாக, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பொலிடிக்கல் வில் அதாவது அரசியல் பெரு விருப்பம் என்பிபியிடம் இருக்க வேண்டும். அதை மேலும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால், மகாவம்ச மனோநிலைக்கு வெளியே வந்து தமிழ் மக்கள் ஏற்கத்தக்க ஒரு தீர்வை முன்வைக்க வேண்டும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை அதுதான் உண்மையான மாற்றம். இதற்கு முன்னிருந்த சிங்கள ஆட்சியாளர்களிடம் இருக்காத அந்த அரசியல் பெரு விருப்பம் என்பிபியிடம் உண்டா?

இந்த விடயத்தில் என்பிபியின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தான் அதற்குத் தடையாகவும் இருக்கப் போகிறது. ஏனெனில் என்பிபி பெற்றிருக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை புரட்சிகரமானது அல்ல.

2019இல் மூன்று விகித வாக்குகளைப் பெற்ற ஒரு கட்சி 2024 இல் ஜனாதிபதி தேர்தலில் 42 விகித வாக்குகளைப் பெற்றது. நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றி இரண்டு பெரும்பான்மையைப் பெற்றிருக்கிறது. இந்த எழுச்சியானது சிங்கள பௌத்த கூட்டு மனோநிலையை அரசியல் மயப்படுத்தியதால் கிடைத்த எழுச்சியல்ல. முன்னைய ஆட்சியாளர்களின் மீது ஏற்பட்ட வெறுப்பினால் ஏற்பட்ட கோப எழுச்சி ராஜபக்சங்களுக்கு வாக்களித்த அதே சிங்கள வாக்காளர்கள்தான் அவர்களை ஓட ஓட விரட்டினார்கள்.

அதே வாக்காளர்கள் தான் இப்பொழுது என்பிபிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது முன்னைய ஆட்சியாளர்கள் மீது வெறுப்படைந்த சிங்கள முஸ்லிம், மலையக வாக்காளர்களும் தமிழ்த் தேசிய கட்சிகளின் மீது நம்பிக்கையிழந்த ஒரு பகுதி தமிழ் வாக்காளர்களும் அள்ளிக் கொடுத்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை அது. இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான மக்கள் ஆணையல்ல.

என்பிபி அந்த வெற்றியின் கைதியாக இருக்குமா? அதாவது இறந்த காலத்தின் கைதியாக இருக்குமா? அல்லது வருங்காலத்தின் துணிச்சலான புரட்சிகரமான தொடக்கமாக இருக்குமா?

சீனத் தூதர் தனது ஊடகச் சந்திப்பில் சுட்டிக் காட்டிய அந்த வாசகங்கள் எழுதப்பட்ட சீமெந்துப் பலகை பருத்தித்துறையில் உள்ளது.சிங்கக் கொடிக்குக் கீழே அந்த வாசகம் எழுதப்பட்டுள்ளது. அது படைத் தரப்பால் நிறுவப்பட்ட ஒரு விளம்பரப் பலகை. அது போன்ற பல தமிழ்ப் பகுதிகளில் உண்டு. குறிப்பாக 2009இல் ஆயுத மோதல்கள் முடிந்த கையோடு ஒரே நாடு ஒரே தேசம் என்ற சுலோகம் ஒரு வெற்றிக் கோஷமாக முன்வைக்கப்பட்டது. பல படை முகாம்களின் முகப்பில் அல்லது மதில்களில் அது எழுதப்பட்டது. இப்பொழுது பல்வகைமைக்குள் ஐக்கியம் என்ற வாசகம் மிஞ்சியிருக்கிறது. பலாலி பெருந் தளத்தின் வடமாராட்சி எல்லை என்று வர்ணிக்கத்தக்க ஒரு திருப்பத்திலும் இந்த வாசகம் உண்டு. தமிழ் மக்களின் நிலத்தைப் பிடித்து வைத்திருக்கும் ஒரு படைத்தரப்பின் சுலோகங்கள் அவை. பல்வகைமைக்குள் ஒற்றுமை என்று அங்கு கூறப்படுவது அதன் மெய்யான பொருளில் சிங்கக் கொடியின் கீழ் ஒரே நாடு ஒரே தேசம் என்பதுதான்.

சீனத் தூதுவர் அதை உதாரணமாகக் காட்டுகிறார். ரில்வின் சில்வாவின் கருத்துக்களும் அதைத்தான் நிரூபிப்பவைகளாகக் காணப்படுகின்றன. தமிழ் மக்கள் இனவாதத்தைப் புறக்கணித்திருப்பதாக அவர் கூறுகிறார். தமிழ்த் தேசிய அரசியல் நிலைப்பாடு என்பது இனவாதம் அல்ல. சிங்கள பௌத்த பெருந் தேசிய வாதம் தமிழ் மக்களை ஒடுக்கியது. தமிழ் மக்களுடைய தேசிய இருப்பை அழிக்க முற்பட்டது. அதற்கு எதிரான போராட்டத் தத்துவந்தான் தமிழ்த் தேசியவாதம். அதில் ஆயிரம் விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால் ஒடுக்குமுறைக்கு எதிரானது என்பதனால் அது முற்போக்கானது என்று மார்க்சியர்கள் கூறுவார்கள். எனவே தமிழ்த்தேசிய வாதம் இனவாதம் அல்ல. அதை இனவாதம் என்று கூறுவது தான் சுத்த இனவாதம்.

அது போலவே ஜனாதிபதி அனுரவின் புதிய நாடாளுமன்றத்துக்கான முதலாவது உரையிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் குறித்துத் தெளிவான அரசியல் அடர்த்தி மிக்க வாக்குறுதிகள் இல்லை. மாறாக மேலோட்டமான பொத்தாம் பொதுவான சொல்லாடல்தான் உண்டு. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் பெரு விருப்பம் என்பிபியிடம் உண்டு என்று நம்பத்தக்க துணிச்சலான வார்த்தைப் பிரயோகங்கள் அங்கு இல்லை. சீனத் தூதுவர் தன்னையறியாமல் சுட்டிக்காட்டியது போல சிங்கக் கொடியின் கீழ் பல்வகைமைக்குள் ஒற்றுமை?

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா
23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை
சங்கீத சங்கமம் 2025
விபரங்களுக்கு:- 416 841 9600

# சீனாவின் விருப்பத்தை நிறைவேற்றிய தமிழர்கள்



கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்

பாராளுமன்றத் தேர்தல் முடிந்த கையோடு யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்ட சீனத் தூதுவர் இந்த முறை தேர்தலில் தமிழ் மக்கள் சரியான முடிவை எடுத்திருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார். தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகளவு வாக்குகளை பெற்றிருப்பது, தமிழ் மக்கள் பரந்துபட்ட அளவில் சிந்திக்க தொடங்கியிருப்பதை காட்டுவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். அவர் சீனத் தூதுவரின் இந்த கருத்து முற்றிலும் அரசியல் மயப்படுத்தப்பட்டதொன்று. அவர் இந்தக் கருத்தை இரண்டு கோணங்களில் வெளிப்படுத்தி இருப்பதாக தெரிகிறது.

தமிழ் மக்களின் நிலைப்பாடு தொடர்பான, சீனாவின் கருத்தென இதனை எடுத்துக் கொள்ளலாம். இன்னொன்று தேசிய மற்றும் சர்வதேச அளவில் சீனாவின் நிலைப்பாட்டை எடுத்துக் கூறுவதாகவும் இருக்கிறது.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வெற்றி வேட்பாளரான பெற்ற போது மார்க்சிஸ்ட் ஜனாதிபதியென சர்வதேச அளவில் குறிப்பிடப்பட்டிருந்தார். அதற்கு காரணம், அவர் இடதுசாரி பாரம்பரியத்தை கொண்ட ஜே.வி.பி. கட் சியில் இருந்து வந்தவர். இலங்கையின் இடதுசாரி கட்சிகளில் மிக மிக தீவிர போக்குடைய இடதுசாரிக் கொள்கையை பின்பற்றி வந்தது.

ஜே.வி.பி. இனவாதமும் மதவாதமும் பழமைவாத கம்யூனிசமும் ஒன்று கலந்த குளறுபடியான கருத்தியலில் ஊறித் திளைத்த தமிழர் விரோதக் கட்சி என 2004 ஆம் ஆண்டு மாவீரர் நாள் உரையில், விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஜே.வி.பி. பற்றி குறிப்பிட்டிருந்தார்.

தேசிய மக்கள் சக்தியாக ஜே.வி.பி. மாற்றம் கண்டுள்ள போதும் அதன் அடிப்படை, இடதுசாரி போக்கில் எந்த மாற்றமும் இருக்கவில்லை. ஆட்சியை கைப்பற்றுவதற்கான ஒரு உத்தியாகவே அது தேசிய மக்கள் சக்தியாக மாறியது.

அதேவேளை சீன சார்பு போக்கில் இருந்து அது கொஞ்சம் கூட விலகவில்லை. அநுரகுமார திசாநாயக்கவின் பின்னால் சீனாவே இருக்கிறது என்ற கருத்து பரவலாக இருந்து வந்தது. முன்னொரு காலத்தில் சீனா, ராஜபக்ஷர்களின் மீது நம்பிக்கை வைத்திருந்தது. அவர்களை கையாளுவதன் மூலமாக இலங்கையில் தனது செல்வாக்கை பேணிக் கொள்ள முற்பட்டது.

ஆனால், கோட்டாபய ராஜபக்ஷவின் வீழ்ச்சிக்குப் பின்னர் ராஜபக்ஷவினரை விட நம்பக் கூடிய புதிய கட்சிகளை தேட தொடங்கியது. ஏற்கனவே ஜே.வி.பி.யுடன் சீனாவுக்கு தொடர்புகள் இருந்தாலும் கோட்டாபய ராஜபக்ஷவின் வீழ்ச்சிக்கு பின்னரே இரு தரப்புக்கும் இடையிலான நெருக்கம் வலுவடைந்தது ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார திசாநாயக்கவின் வெற்றிக்கு சீனா, எத்தகைய பங்களிப்பை வழங்கியது என்பது குறித்த கேள்விகள் இருக்கின்றன.

பாராளுமன்ற தேர்தலிலும், தேசிய மக்கள் சக்தியின் வெற்றியை சீனாவுடன் எதிர்பார்த்திருந்திருக்கிறது. என்பது அப்பட்டமாக தெரிகிறது. சீனாவும் ரஷ்யாவும் எப்போதுமே, நாங்கள் உள்நாட்டு அரசியலில் தலையிடுவதில்லை என்று கூறிக் கொள்வதை வழக்கமாக கொண்ட நாடுகளாகும். ஆனால் தேசிய மக்கள் சக்தி வடக்கில் வெற்றி பெற்றதையிட்டு சீனா பூரிப்பை வெளியிட்டிருப்பது, அதன் அரசியலை, அரசியல் சார்பை வெளிக் கொணர்ந்திருக்கிறது. பூகோள அரசியல் களத்தில், இதியாவும் சீனாவும்



போட்டி போட்டுக் கொண்டிருக்கும் அதேவேளை, இலங்கையின் உள்நாட்டு அரசியலில் தமக்கு சார்பான சூழலை உருவாக்குவதிலும் கவனம் செலுத்துகின்றன என்பது இப்போது வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது. தமிழ் மக்கள் சரியான தீர்மானத்தை எடுத்திருக்கிறார்கள் என்ற சீனத் தூதுவரின் கருத்து, நிச்சயமாக ஒரு அரசியல் சார்பை காட்டுகிறது.

தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த ஆதரவை சீனா வரவேற்பதாக இருக்கிறது. ஏன் சீனா இவ்வாறு வரவேற்க வேண்டும்? தமிழ் கட்சிகளின் பின்னடைவை சீனா ஏன் கொண்டாட வேண்டும்? என்ற கேள்வி இத்தருணத்தில் எழுகிறது.

தமிழ்க் கட்சிகளை கையாளும் விடயத்தில் சீனா கடந்த காலங்களில் பெரியளவில் வெற்றி பெற முடியவில்லை என்பது வெளிப்படையான உண்மை. அதற்கு காரணம் இந்தியாவே ஆகும். தமிழ்த் தேசியக் கட்சிகள் பெரும்பாலும் இந்திய சார்பு நிலையை கொண்டிருப்பவை. அவை, இந்தியாவை முற்று முழுதாக ஏற்றுக் கொண்டு செயல்படாது போனாலும் .இந்தியாவுடன் முரண்டு பிடிக்கவோ அதனுடன் முரண்படவோ விரும்பாதவை.

பெரும்பாலான தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்தியா கூறுவதை கேட்கக் கூடிய நிலையில் இருப்பவை. ஆனால் இந்த கட் சிகளை ஊடுருவுகின்ற சீனாவின் முயற்சி அண்மைக் காலத்தில் தோல்வியை சந்தித்திருந்தது. தமிழ்க் கட்சிகளை தங்கள் பக்கம் திருப்புகின்ற முயற்சியில் சீனத் தூதுவரும் ஈடுபட்டிருந்தார். ஆனால் இந்தியாவை மீறி அல்லது இந்தியாவுக்கு எதிராக செயற்பட தமிழ்க் கட்சிகள் தயாராக இருக்கவில்லை. இது சீனாவுக்கு ஏமாற்றத்தை கொடுத்திருந்தது. இந்த சூழலில், தமிழ்க் கட்சிகள் வடக்கில் பின்னடைவை சந்தித்திருப்பது சீனாவுக்கு மகிழ்ச்சியை கொடுத்திருக்கிறது என்பதை சீன தூதுவரின் கருத்தில் இருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

அதனால் தான் தேசிய மக்கள் சக்திக்கு வடக்கில் உள்ள மக்கள் ஆதரவளித்திருப்பதை, சீன தூதுவரால் வரவேற்க முடிந்திருக்கிறது. அதுவே சரியான முடிவென வெளிப்படுத்த முடிந்திருக்கிறது. இவ்வாறான ஒரு கருத்தை இந்தியாவோ அல்லது இந்திய உயர் ஸ்தானிகரோ வெளிப்படுத்தியிருந்தால் அது மிகப் பெரிய சர்ச்சைக்குரிய விடயமாக தெற்கில் பார்க்கப்பட்டிருக்கும். இந்திய சார்பு நிலையில் இருப்பதாக, சார்பு தன்மையுடன் செயற்படுவதாக சர்ச்சைகள் உருவாக்கப்பட்டிருக்கும். ஆனால், சீனத் தூதுவரின் கருத்து அத்தகைய எந்த சலசலப்பையும் ஏற்படுத்தவில்லை என்பது கவனிக்க வேண்டிய விடயம்.

உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லை என்று கூறுகின்ற சீனா, தமிழ் மக்களின் வாக்குகள் அளிக்கப்பட்ட முறையை வரவேற்பது அல்லது அதற்கு எதிராக கருத்து வெளியிடுவது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்று அல்ல. ஆனால் வடக்கில் உள்ள தமிழ் மக்கள் இப்பொழுது பரந்து பட்ட ரீதியாக சிந்திக்கி தொடங்கி இருக்கிறார்கள் எனச் சீனத் தூதுவர் கூறியிருப்பது, தமிழர்கள் தமிழர்களாக சிந்திப்பதை சீனா விரும்பவில்லை என்பதையும் காட்டுகிறது.

அவ்வாறு சிந்திப்பதை சீனா குறுகிய பார்வையாக, குறுகிய நோக்கம் கொண்டதாக கருதியிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. அப்படியானால், தமிழர்கள் பரந்துபட்டு சிந்திக்க தொடங்கி இருக்கிறார்கள் எனச் சீனத் தூதுவர் கூறியிருப்பது எதனை?

தமிழர்கள் தங்கள் இனத்துவ சிந்தனையை விட்டு வெளியே வந்து, சிங்கள தேசியக் கட்சி ஒன்றுக்கு வாக்களிக்க முற்பட்டிருப்பதை தான், அவர் அப்படி கூறியிருக்கிறார். இதனைத் தான் பரந்துபட்ட சிந்தனையாக பார்க்கிறார். ஜே.வி.பி.யும் இதையே தான் எதிர்பார்த்தது. எதிர்பார்க்கிறது. தமிழர்கள் அல்லது முஸ்லிம்கள் தங்களின் இன அடையாளங்களை விட்டு வெளியே வந்து, சிங்கள தேசியத்தில் ஐக்கியமாக வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. இங்கு சிங்கள தேசியம் என அவர்கள் வெளிப்படையாக கூறா விட்டாலும், இலங்கையராக ஒன்றுபடுங்கள் என்று கூறுகிறார்கள். ஒரே கட்சியாக ஒன்றுபடுவது பற்றி யாழ்ப்பாணத்தில் பேசும் போதே, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கூறி இருந்தார். ஒரே கட்சியாக ஒன்றிணைவது என்பது, தனிக்கட்சி ஆட்சியை குறிக்கிறது. சீனாவிலும் அது தான் இருக்கிறது.

சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சி பாணியில் தேசிய மக்கள் சக்தி ஒரே கட்சியாக முழுநாட்டையும் ஆளுகின்ற சிந்தனையில் இருக்கிறதா என்ற சந்தேகம் தோன்றியிருக்கிறது. சீனா அதனை ஊக்குவிக்கக் கூடும். ஏனென்றால் பூமிப் பந்தில் இன்னொரு கம்யூனிஸ சித்தாந்த நாடு உருவாவதை சீனா ஒரு போதும் உதறித் தள்ளாது. அதுவும் இந்தியாவுக்கு அருகிலேயே அது உருவாகுவதை சீனா இன்னமும் விரும்பி வரவேற்கும். தமிழர்கள் அல்லது முஸ்லிம்கள் தங்களது அடையாளங்களை விட்டு வெளியே வர யாரும் வேண்டும் என்று மாத்திரமே.

தேசிய மக்கள் சக்தியும் சரி, சீனாவும் சரி எதிர்பார்க்கின்றன. அந்த அடையாளங்களை இல்லாமல் செய்து விட்டால், இலங்கை என்ற அடையாளத்துக்குள் அனைவரையும் கொண்டு வந்து விடலாம். அதன் மூலம் தமிழ்த் தேசிய அரசியலையோ, இந்திய சார்பு அரசியலையோ முன்னெடுக்க முடியாத நிலை உருவாகும். அத்தகைய நிலை ஒன்றை உருவாக்கும் நோக்கில் தான், தேசிய மக்கள் சக்தியும் சீனாவும் காய்களை நகர்த்த ஆரம்பித்திருக்கின்றன, இரண்டு தரப்புகளும், இதனை வடக்கில் இருந்து முன்னெடுக்க தொடங்கியிருப்பது தான், முக்கியமான விடயம் இதற்கு இந்தியா எவ்வாறு பதிலளிக்கப் போகிறது? இந்த சூழலை எவ்வாறு கையாளப் போகிறது?

## மக்கள் பிரதிநிதிகளின் வரலாற்றுக்.....

(13ம் பக்கத் தொடர்ச்சி) எடுக்க விருப்பமற்றவர்களாக உள்ளனர் தற்போது தோன்றியுள்ள புதிய அரசியல் சூழலில் மீண்டும் அரைத்தமாவையே அரைத்து காலத்தை கடத்தாது அரசியல் தீர்வை நோக்கிய பயணத்துக்கு சமாந்தரமாக மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியை நோக்கமாக கொண்டு புலம்பெயர் உறவுகளின் பங்களிப்புடன் தெளிவான நிறைவேற்றக்கூடிய திட்டமுன் மொழிவுகளுடன் புதிய அரசாங்கத்தை அணுகுவதன் மூலமே எமது மண்ணும் மக்களும் பாதுகாக்கப்படுவர் எனபதற்குரிய வரலாற்றுக் கடமையை உணர்ந்து பாராளுமன்ற பிரதிநிதிகள் செயற்பட வேண்டும் என்பதே தமிழ்மக்களின் எதிரபார்ப்பாக உள்ளது

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
32வது ஆண்டு விழா
23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை
சங்கீத சங்கமம் 2025
விபரங்களுக்கு:- 416 841 9600

# பிராந்திய அரசியலின் முடிவும் தேசிய அரசியலின் தொடக்கமும்

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



மட்டக்களப்பு மாவட்டத்தைத் தவிர, நாடு முழுவதும் தேசிய மக்கள் சக்தியே (NPP) வெற்றியடைந்துள்ளது. மட்டக்களப்பிலும் இரண்டாவது இடத்தில் தேசிய மக்கள் சக்தி (NPP) யே நிற்கிறது.

சுதந்திரத்துக்குப் பின்னான இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு தேசியக் கட்சி, நாடு முழுவதிலும் வெற்றியீட்டியது இந்தத் தடவை தான். இதற்கு முன்னான தேர்தல்களில் ஐ.தே.கவோ, பொதுஜன பெரமுனவோ சு.கவோ பெரும்பான்மையை அல்லது அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றாலும், அதில் வடக்குக் கிழக்குப் பிராந்தியங்கள் விலகியே இருந்தன. அல்லது வடக்குக் கிழக்குப் பிராந்தியங்களை அவற்றினால் வெற்றி கொள்ள முடியவில்லை.

ஆனால் இந்தத் தடவை வடக்குக் கிழக்கிலும் முதன்மையிடத்தை தேசிய மக்கள் சக்தி (NPP) பெற்றுள்ளது. இது தேசிய மக்கள் சக்தியின் அரசியற் கோட்பாட்டினதும் நடைமுறைகளினதும் வெற்றியா? அல்லது அதன் மீதான நாடளாவிய நம்பிக்கைகளின் விளைவா? என்பது ஆராய்வுக்குரியது.

பல தசாப்தங்களாக சமூகப் பிராந்தியம் (Social region) மற்றும் புவியியற் பிராந்திய (Geographical region) அரசியலில் செல்வாக்குச் செலுத்தி வந்த தமிழ்த்தேசிய, முஸ்லிம் தேசிய, மலையகத் தேசியக் கட்சிகளையும் அவற்றின் அரசியலையும் கடந்து தேசியமக்கள் சக்தி (NPP) யை மக்கள் நெருங்கிச் செல்ல நேர்ந்தது எதற்காக அல்லது எதனால்?

தேசிய மக்கள் சக்தி இந்த மக்களுக்கு இதுவரை ஆற்றிய நல்விளைவுகளினாலா? நிச்சயமாக இல்லை. அதற்கான ஆட்சியதிகாரத்தை அது கொண்டிருக்கவுமில்லை. அதனுடைய ஐம்பது ஆண்டுகால அரசியற் செயற்பாட்டுப் பரப்பில் வடக்குக் கிழக்குப் பிராந்தியங்களோ, மலையக, முஸ்லிம், தமிழ்ச் சமூகப் பிராந்தியங்களோ உள்ளடங்கியிருக்கவுமில்லை. உதிரிகளாக சிலர் தேசிய மக்கள் சக்தியோடு அல்லது ஜே.வி.பியோடு இணைந்திருந்தனரே தவிர, சமூகப் பிராந்தியமாகவும் புவியியற் பிராந்தியமாகவும் இணைந்திருக்கவில்லை.

ஆனால், தேசிய மக்கள் சக்தி (NPP) யை இன்று சிங்கள மக்கள் மட்டுமல்ல, தமிழ், முஸ்லிம், மலையக மக்களும் நம்பியிருக்கிறார்கள். அதனுடைய இளைய தலைமுறை உறுப்பினர்களின் ஆற்றலையும் நேர்மையையும் மதிக்கிறார்கள். அந்த நம்பிக்கையின் மதிப்பின் வெளிப்பாடே நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் நாடளாவிய ரீதியில் பெற்ற மாபெரும் வெற்றியாகும். இது வரலாற்று வெற்றியாகவே கருதப்படுகிறது. அது உண்மையும் கூட.

மாற்றத்தை அல்லது தாங்கள் விரும்புகின்றதொரு அரசியற் சூழலை தேசிய மக்கள் சக்தி உருவாக்கும் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்த நம்பிக்கையும் எதிர்பார்ப்புமே அதனை நோக்கி மக்களை நெருங்கிச் செல்ல வைத்தது. அதுவே தேசிய மக்கள் சக்தியின் பிராந்திய வெற்றியாகும்.

அதேவேளை மக்கள் எதிர்பார்க்கின்ற விரும்புகின்ற வெற்றியை தேசிய மக்கள் சக்தி வழங்கினால் அது மக்களுக்குக் கிடைக்கும் மக்கள் பெறுகின்ற வெற்றியாக அமையும்.

இந்தப் பின்னணியில் மக்கள் தமக்குரிய தமக்குப் பொருத்தமானதெனக் கருதுகின்ற அரசியற் தெரிவைச் செய்வது அவர்களுடைய உரிமையும் தேவையுமாகும். அதை மறுப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை.

இந்தச் சூழலிற் தான் பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் பிராந்திய அரசியலின் எதிர்காலத்தைக் குறித்த கேள்விகளைப் பலமாக்கியிருக்கிறது. இப்படித்தான் நடக்கும் என விடயங்களைக் கூர்மையாக நோக்குவோர் ஓரளவுக்கு எதிர்பார்த்திருந்தனர். அது நடந்திருக்கிறது. இதற்குக் காரணம்

1.பிராந்திய (தமிழ்த்தேசியம், முஸ்லிம் தேசியம், மலையகத் தேசியம்) அரசியற் கோட்பாட்டின் வீரியமின்மையும் நடைமுறைப் பலவீனங்களும்.




2.ஆளுமைக் குறைபாடும் ஆற்றலின்மையும் கொண்ட தலைமைகள்.

3. கட்சிகளின் கட்டமைப்புப் பலவீனம்.

4. செயற்பாட்டுத் திறனின்மை.

5.மக்களுடனான உறவுச் சிக்கல்.

6.நேர்மையீனம். 7 இராசதந்திரப் போதாமை.

8.சமூக, பொருளாதார அடிப்படைகளில் அக்கறையற்ற தன்மை

9. அர்ப்பணிப்பின்மை

10.வேலைத்திட்டங்கள் எதுவும் இல்லாத நிலை.

11. பொறுப்புக் கூறல் பொறுப் பெடுத்தல் பொறுப்புணர்தல் ஆகியவை இல்லை.

12. ஜனநாயக விழுமியங்களைப் பொருட்படுத்தாக நடவடிக்கைகளும் நடத்தைகளும்.

13. பிராந்திய அரசியலையும் தேசிய அரசியலையும் கையாள்வது தொடர்பில் கொண்டுள்ள குழப்பங்களும் முரண்பாடுகளும்.

14. பிராந்திய மட்டத்திலும் தேசிய ரீதியிலும் காணப்பட்ட குறைபாடுகள், குற்றச் செயல்கள், அநீதிகள், மக்கள் விரோதச் செயல்கள், இயற்கை வளச் சிதைப்புகள், ஊழல் முறைகேடுகள், நிர்வாக துஸ்பிரயோகம் போன்ற எதைப் பற்றியும் பொருட்படுத்தாத அரசியல் தலைமைகளின் பொறுப்பின்மை.

இப்படியான பல காரணங்களால் பிராந்திய அரசியலின் அடித்தளம் பலவீனப்பட்டுள்ளது. இதற்கான பொறுப்பினை பிராந்திய அரசியலை மேற்கொண்டு வந்த வருகின்ற அரசியற் கட்சிகளும் அவற்றின் தலைமைகளும் நேர்மையோடு ஏற்க வேண்டும். அத்துடன், பிராந்திய அரசியலை ஆதரித்த ஆதரிக்கின்ற ஊடகங்களும் அதை முன்னிறுத்தி எழுதும் பத்தியாளர்களும் அதனுடைய ஆதரவாளர்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதுவே அரசியல் நேர்மையும் அறமுமாகும். அப்படிச் செய்தால்தான் அடுத்த கட்ட அரசியலையாவது பொருத்தமானதாக யதார்த்தமானதாக முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும்.

பிராந்திய அரசியல் வீழ்ச்சிக்கான காரணங்கள் வெளிப்படையாகவே தெரிந்தவை எனக் கண்டோம். இவை அனைத்தும் ஏற்கனவே பலராலும் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டப்பட்டவை. ஆனாலும் அவை குறித்து எந்தக் கவனமும் கொள்ளப்படவில்லை. (இப்போதும் அதுதான் நிலைமை) பதிலாக அவை அனைத்தும் உதாசீனப்படுத்தப்பட்டு, அவமதிக்கப்பட்டன. மட்டுமல்ல, இந்தக் காரணங்களைச் சுட்டிக் காட்டியோரையும் இவற்றின் மீதான விமர்சனங்களை வைத்தவர்களையும் புறமொதுக்கி துரோகப்பட்டியலில் சேர்த்ததே நடந்தது.

விளைவு? இன்று பிராந்திய அரசியல் நெருக்கடிக்குள்ளானதேயாகும். இதை உரிமைகளுக்கான அரசியல் எனச் சித்திரித்தாலும் மறுபுறத்தில் குறுந்தேசியவாத அரசியலாகவே சுருக்கப்பட்டிருந்தது. குறுந்தேசியவாத அரசியலினால் ஒரு போதும் மக்களுடைய தேவைகளையோ பிரச்சினைகளையோ தீர்த்து வைக்க முடியாது.

ஆனால், குறுந்தேசியவாதத்தினால் ஒரு எல்லைவரையில் மக்களுடைய உணர்வுகளைச் சீண்டிக் குவிமையப்படுத்த முடியும். அதுவே நடந்தது.

ஆனால் மக்கள் எப்போதும் தங்களுடைய வாழ்க்கைக்கான தேவைகளையும் பிரச்சினைகளையும் ஓரங்கட்டி விட்டு உணர்ச்சிகரமான அரசியல் விளையாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள். அப்படியிருக்கவும் முடியாது. ஏற்கனவே இந்த அரசியல் விளையாட்டில் ஈடுபட்ட பலரும் ஒரு கட்டத்தில் அதிலிருந்து வெளியேறிப் புலம்பெயர்ந்து விட்டனர். (அங்கே போயிருந்து கொஞ்சம் தங்களை வளப்படுத்திக் கொண்டு, பிறகு இந்த அரசியல் விளையாட்டில் ஈடுபடுகின்றவர்களும் உண்டு). மிஞ்சியோர் மாற்று வழிகளைத் தேடிக் கொண்டனர். சிலர் இதிலிருந்து ஒதுங்கிக் கொண்டனர். ஒரு தொகுதியினர் மட்டும் இதை ஒரு வியாபார உத்தியாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

ஆகவே ஒரு சிறிய தரப்பைத் தவிர, ஏனையோர் ஏதோ ஒரு நிலையில் அல்லது வேறு சூழலில் தமது வாழ்க்கையையும் அதற்கான தேவைகளையும் முதன்மையாகக் கொண்டுதான் சிந்திப்பர். அதற்கான அரசியலையே அவர்கள் நாடுவர். இதுதான் உலகெங்கும் உள்ள பொதுவான இயல்பும் நடைமுறையுமாகும். இது தவிர்க்க முடியாதது.

ஏனென்றால், எல்லாவற்றையும் விட முக்கியமானது வாழ்க்கை. வாழ்க்கைக்கே விடுதலையும் பொருளாதாரமும் அரசியலும். ஆகவே வாழ்க்கையை விட்டு விட்டு நீங்கள் உங்களை முழுதாக ஒறுத்து, விடுதலைக்கான அரசியலுக்காக முன் வாருங்கள். வாழ்க்கையையும் விட விடுதலையே முதன்மையானது என்றால் ஒரு எல்லை வரை தான் வருவார்கள். அதற்குப் பிறகு, தங்களுடைய வாழ்க்கையைப் பற்றியே சிந்திக்கத் தொடங்குவர். அதுவே இப்பொழுது நடந்திருக்கிறது.

இதை இந்த உண்மையை இந்த யதார்த்தத்தை உணர்ந்து கொள்ளத் தயாரில்லாதவர்கள், தேர்தல் முடிவுகள் வெளியானவுடன், தமிழ் மக்களெல்லாம் தமது இன உணர்வையும் உரிமைக்கான அரசியற் பயணத்தையும் மறந்து விட்டனர் என்று சமூக வலைத்தளங்களிலும் பொதுவெளியிலும் புலம்பத் தொடங்கி விட்டனர். தாங்க முடியாமற் துயரத்தைப் பகிர்கின்றனர்.

சிலர் இதற்கும் மேலே சென்று சனங்களைத் திட்டித் தீர்க்கின்றனர். எந்த வகையான உத்தரவாதத்தின் அடிப்படையில் NPP க்கான ஆதரவைத் தமிழ் மக்கள் வழங்கலாம் என்று சிலர் கேட்கின்றனர். இதுவரையில் NPP யோ JVP யோ தமிழ்மக்களுக்குச் செய்த நன்மைகள் என்ன? என்றும் கேட்கிறார்கள்.

சனங்களைத் திட்டுவதற்கான உரிமையும் தார்மீக அடிப்படையும் யாருக்கும் இல்லை. சனங்கள் இவ்வளவு காலமும் பிராந்திய அரசியலை மேற் கொண்ட தலைவர்களின் கருத்துகளையும் அந்தக் கட்சிகளின் அரசியலையும் ஏற்றே நின்றனர்.


ஏறக்குறைய 75 ஆண்டுகள். 75 ஆண்டுகள் என்பது ஆறு தலைமுறையின் இளமை அழிந்த காலமாகும். இதற்குள் தங்களுடைய இளமையை மட்டும் அவர்கள் இழக்கவில்லை. பல்லாயிரக்கணக்கான உயிர்களையும் உறவுகளையும் வாழிடங்களையும் வளமான சூழலையும் இழந்திருக்கின்றனர். ஆனால் இந்தக் காலத்தில் மக்களை விடப் பன்மடங்கு மேலான வாழ்க்கையையே தலைவர்கள் வாழ்ந்தனர். அதேவேளை மக்கள் தமது சக்தியையும் மீறி இவர்களுடைய தலைமையை, அரசியலை ஏற்று நின்றனர். அதற்காகப் பெருந்தியாகங்களைச் செய்தனர்.

இதையெல்லாம் சீரியஸாக எடுத்துக் கொள்ளாமல், தாம் எப்படி நடந்து கொண்டாலும் தமிழ்த்தேசியத்தின் பேராலும் இன உணர்வினாலும் அதையெல்லாம் மக்கள் ஏற்றுக் கொள்வர் என்ற திமிரோடிருருந்தனர். அந்த நம்பிக்கையை வைத்துக் கொண்டே இந்தத் தேர்தலில் கூட இந்தக் களைக் கூத்தாடிகள் கூத்தாடினர்.

இதைக் குறித்தெல்லாம் அதாவது இந்தத் தவறுகளைக் குறித்தெல்லாம் இவர்களில் எவரும் கவலைப்படவில்லை. இவர்களை ஆதரித்தோரும் கண்டு கொள்ளவில்லை, கண்டிக்கவில்லை. இவர்களைப் பொறுத்த வரையில் தாம் எப்படி, எதைச் செய்தாலும் அதையெல்லாம் ஏற்றுக் கொண்டு மக்கள் மந்தைகளாகவே இருப்பர். அப்படி இருக்க வேண்டும் என்பதுதான் நிலைப்பாடாகும்.

ஆனால் மக்களோ வரலாறோ ஒரு போதும் அப்படியே இருப்பதில்லை. அதுவே இப்போது நிகழ்ந்திருப்பதாகும். தென்னிலங்கையிலுள்ள மக்கள் விரோதச் சக்திகளுக்கு நடந்ததே வடக்குக் கிழக்குப் பிராந்தியத்திலும் நடந்திருக்கிறது. ஏறக்குறைய இதே காட்சிகள் மலையகத்திலும் முஸ்லிம் பிராயத்தியத்திலும் நடந்திருக்கிறது சிற்சில வேறுபாடுகளுடன். பிராந்திய அரசியலினதும் அதை மேற்கொண்டு(22ம் பக்கம் பார்க்க)

Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 647 700 7208 | +1 416 477 6854
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2

# உங்கள் வாழ்க்கைக்கு பொருத்தமான வாழ்க்கைத் துணையை இன்றே தேடிக்கொள்ள Friends Matrimony இல் பதிவு செய்யுங்கள்...

## BLACK FRIDAY

UP TO 40% OFF

**REGISTER NOW**



## மணமகள்

**ID08120581** (F)
29yrs, 5'4" , Single , Thiruvaathirai , 6 Sevai , Ph.D , Senior Engineer , United States

**ID08120622** (F)
34yrs, 5'4" , Seperated , Uthirattathi , N/A Sevai , Masters Degre , Business development.. , Sri

**ID08120565** (F)
28yrs, 5'5" , Single , Thiruvaathirai , 8 Sevai , Postgraduate.. , Studies , Sri Lanka

**ID08120471** (F)
32yrs, 5'9" , Awaiting Divorce , Not Specified , N/A Sevai , Masters Degree , IT Project.. , Singapore

**ID08120453** (F)
31yrs, 5'4" , Single , Poorattathi , 11 Sevai , Masters Degree , Senior Manager , Canada

**ID08120442** (F)
29yrs, 5'7" , Single , Moolam , 12 Sevai , Bachelors.. , Goverment.. , Canada

**ID08120391** (F)
28yrs, 5'2" , Single , Thiruvonam , 3 Sevai , Bachelors.. , Service Support.. , Canada

**ID08120973** (F)
28yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Tba , United Kingdom

**ID08120939** (F)
25yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Tba , Canada

**ID08120675** (F)
29yrs, 5'4" , Single , Pooram , N/A Sevai , Bachelors.. , Student , Sri Lanka

**ID08120667** (F)
25yrs, 5'1" , Single , Thiruvaathirai , N/A Sevai , High School , Home , Sri Lanka

**ID08120650** (F)
26yrs, 4'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Law student ,Sri Lanka

## மணமகன்



**ID08120639** (M)
35yrs, 5'6" , Single , Makam , 8 Sevai , Bachelors.. , Own Bussiness , United States

**ID08120616** (M)
33yrs, 5'5" , Single , Bharani , 11 Sevai , Bachelors.. , Insurance.., Canada

**ID08120583** (M)
32yrs, 5'10" , Single , Poorattathi , 9 Sevai , Bachelors.. , Project Engineer , Canada

**ID08120564** (M)
34yrs, 5'11" , Single , Hastham , 8 Sevai , Bachelors.. , Website Administrator , Canada

**ID08120503** (M)
43yrs, 5'7" , Divorced , Aswini , 6 Sevai , Masters Degree , Accountant , India

**ID08120974** (M)
30yrs, 5'5" , Single , Poorattathi , N/A Sevai , Postgraduate.. , Instructor , Sri Lanka

**ID08120972** (M)
49yrs, 5'10" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Resturant.. , Sri Lanka

**ID08120969** (M)
30yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , BSC Civil.. , Sri Lanka

**ID08120968** (M)
30yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , High School , Store controller , Sri Lanka

**ID08120964** (M)
42yrs, 5'7" , Single , Aswini , N/A Sevai , High School , Technical.. , Sri Lanka

**ID08120957** (M)
31yrs, 5'6" , Single , Chithirai , 1 Sevai , Postgraduate.. , Retail Manager , Canada

**ID08120929** (M)
33yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , High School , Contruction.. , Canada

# வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் வாக்களித்த முறைமையை விளங்கிக் கொள்ளுதல்

கட்டுரையாளர்:-
மூத்த ஊடகவியலாளர்
- வீ.தனபாலசிங்கம் -



2024 நவம்பர் பாராளுமன்ற தேர்தல் கண்டிருக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல முதலாவதுகளில்'' கூடுதலான அளவுக்கு கவனத்தை ஈர்த்திருப்பவை தேசிய மக்கள் சக்தி சாதித்த இரு சாதனைகளேயாகும்.

தேசிய மக்கள் சக்தியின் பிரமாண்டமான வெற்றி இலங்கையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு தனியொரு கட்சி அல்லது கூட்டணி பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்ற முதலாவது சந்தர்ப்பத்தை குறித்து நிற்கிறது.

அடுத்ததாக நாட்டில் உள்ள 22 மாவட்டங்களில் ஒரு மாவட்டத்தை தவிர, ஏனைய சகலவற்றிலும் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றிருக்கிறது. இந்த வெற்றியில் மிகவும் பிரத்தியேகமாக கவனிக்க வேண்டியது வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஐந்து தேர்தல் மாவட்டங்களில் மட்டக்களப்பை தவிர ஏனைய மாவட்டங்களில் தேசிய மக்கள் சக்தி கூடுதல் ஆசனங்களைக் கைப்பற்றியமையேயாகும். மலையக தமிழர்கள் பெருமளவில் வாழ்கின்ற மாவட்டங்களிலும் அதே நிலைதான்.

சிங்களவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு அரசியல் கட்சி தமிழ்த் தேசியவாத அரசியலின் கோட்டை யாக விளங்கிய யாழ்ப்பாண மாவட்டம் உட்பட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள மாவட்டங்களில் பெரும்பாலான ஆசனங்களை முதற் தடவையாக கைப்பற்றியிருக்கிறது.

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் முதற் தடவையாக வடக்கில் இருந்து தெற்கு வரையும் கிழக்கில் இருந்து மேற்கு வரையும் இன, மத வேறுபாடுகளைக் கடந்து வாக்காளர்களின் அமோக ஆதரவை தேசிய மக்கள் சக்தி பெற்றிருக்கிறது. இந்த வரலாற்று வெற்றி குறித்து அகவுணர்வுக்கு அப்பாற்பட்ட சரியான வியாக்கியானத்தை அரசியல்வாதிகளோ அல்லது அவதானிகளோ இதுவரையில் வைத்ததாக கூற முடியாது.

தேசிய மக்கள் சக்திக்கு நாடு பூராவும் கிடைத்த மகத்தான ஆதரவு தேசிய ஐக்கியத்தை நோக்கிய வழக்கம் மீறிய குறிப்பிடத்தக்க ஒரு அடியெடுத்து வைப்பு என்றும் வரலாற்று ரீதியாக மத்திய ஆட்சிமுறை மீது வெறுப்புக் கொண்டிருந்த பிராந்தியங்கள் கூட ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்கவின் தலைமைத்துவத்தில் நம்பிக்கையை வெளிப்படுத்தியிருக்கின்றன என்றும் சில அவதானிகள் கூறியிருக்கிறார்கள்.

பாரம்பரியமான பிளவுகளை கடந்து தேசிய நோக்கு ஒன்றை வளர்ப்பதில் தேசிய மக்கள் சக்தி வெற்றி கண்டிருக்கிறது என்றும் பிரதான அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரசாரங்களில் சிறுபான்மைச் சமூகங்களை அழுத்தும் முக்கியமான பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்ற போதிலும், வடக்கு, கிழக்கிலும் நாட்டின் ஏனைய பாகங்களிலும் தேர்தல் முடிவுகள் ஒரே மாதிரியாக அமைந்திருப்பது தேசிய அரசியல் நீரோட்டத்தில் இணைந்துகொள்வதில் அந்த மக்கள் அக்கறை காட்டத் தொடங்கி விட்டார்கள் என்பதன் வெளிப்பாடு என்றும் அந்த அவதானிகள் கூறுகிறார்கள்.

அதேவேளை தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவ கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) தலைவர்கள் குறிப்பாக அதன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா போன்றவர்கள் சிறுபான்மைச் சமூகங்கள் இனவாத அரசியலை நிராகரித்திருக்கின்றன என்று கூறுகிறார்கள்.

வழமைக்கு மாறான முறையில், இந்தத்தடவை ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் தென்னிலங்கையில் தேசியவாத பிரசாரங்களுக்கு இடமிருக்கவில்லை. ராஜபக்சாக்களின் தலைமையில் சிங்கள பௌத்த தேசியவாத அரசியலை முன்னெடுத்த சக்திகள் படுமோசமாக பலவீனமடைந்திருந்திருப்பதும் பிரதான அரசியல் கட்சிகள் சிறுபான்மைச் சமூகங்களின் வாக்குகளைப் பெறுவதற்காக நேசக்



கரம் நீட்டியதும் அதற்கு பிரதான காரணங்களாகும்.

இதுகாலவரை வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி வந்த தமிழ்த் தேசியவாத அரசியல் கட்சிகள் பாராளுமன்ற தேர்தலில் மோசமான பின்னடைவைச் சந்தித்திருக்கின்றன. கடந்த பாராளுமன்றத்தில் கொண்டிருந்ததையும் விட இந்த தடவை இரு ஆசனங்களை கூடுதலாகப் பெற்றிருப்பது குறித்து இலங்கை தமிழரசு கட்சி பெருமைப் படுவதற்கு எதுவுமில்லை. ஐந்து மாவட்டங்களில் தேசிய மக்கள் சக்தி அதிகமான ஆசனங்களைக் கைப்பற்றியதன் பின்னணியிலேயே அந்த கட்சி தமிழ் மக்கள் மத்தியில் அதன் தற்போதைய அந்தஸ்தை நோக்க வேண்டும்.

தமிழ்க் கட்சிகளின் இத்தகைய பின்னடைவுக்கு மத்தியில், தென்னிலங்கையில் சிங்கள பௌத்த கடும்போக்கு தேசியவாதிகள் என்று அடையாளம் காணப்பட்ட பல அரசியல்வாதிகள் இந்த தடவை பாராளுமன்றத்துக்கு தெரிவாகவில்லை. இந்த நிகழ்வுப் போக்குகளை அடிப்படையாக வைத்து தெற்கில் சிங்கள பௌத்த தேசியவாதமும் வடக்கில் தமிழ்த் தேசியவாதமும் தோற்கடிக்கப்பட்டு விட்டதாக சில விமர்சகர்கள் கூற முற்படுகிறார்கள்.

குறிப்பிட்ட சில சிங்கள கடும்போக்கு தேசியவாதிகளின் தேர்தல் தோல்வியை சிங்கள பௌத்த தேசியவாதத்தின் தோல்வி என்று எவ்வாறு வியாக்கியானம் செய்ய முடியாதோ, அதே போன்றே தமிழ்த் தேசியவாதக் கட்சிகளுக்கு வடக்கு, கிழக்கில் ஏற்பட்ட கடுமையான பின்னடைவை தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய வாதத்தை நிராகரித்திருப்பதாக வியாக்கியானம் செய்ய முடியாது.

தமிழ் மக்கள் தேசியவாத சிந்தனைகளின் அடிப்படையிலான தங்களின் நியாயபூர்வ அரசியல் அபிலாசைகளில் அக்கறை காட்டாமல் தேசிய இனப் பிரச்சினை தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டு தேர்தலில் ஆதரவை வழங்கினார்கள் என்று கூறமுடியாது.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான கடந்த பதினைந்து வருடங்களாக தங்களை பிதிநிதித்துவம் செய்து வந்த தமிழ் கட்சிகள் மற்றும் அவற்றின் தலைவர்கள் மீதான வெறுப்பையே வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் வாக்களிப்பின் மூலம் வெளிக்காட்டியிருக்கிறார்கள்.

வெறுமனே கடந்த கால போராட்டங்களை மாத்திரம் நினைவு படுத்திக் கொண்டு உணர்ச்சிவசமான தமிழ்த் தேசியவாத சுலோகங்களை பயன்படுத்தி எந்தப் பயனையும் தராத அரசியல் அணுகுமுறைகளை கடைப்பிடித்து வந்த தமிழ் அரசியல் தலைவர்கள் இனிமேலும் தங்களுக்கு சரியான பாதையை காட்டுவார்கள் என்று தமிழ் மக்கள் நம்பவில்லை. அத்துடன் முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு தமிழ் அரசியல் சக்திகள் ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டிய ஒரு கால கட்டத்தில் தமிழ் அரசியல் சமுதாயம் சிதறுப்பட்டு நிற்பதனால் தமிழ் மக்கள் சீற்றமடைந்திருக்கிறார்கள். தங்கள் மத்தியில் தமிழ்க் கட்சிகளுக்கு மாற்றாக நடைமுறைச்சாத்தியானதும் விவேகமானதுமான அரசியல் பாதையில் தங்களை வழிநடத்தக்கூடிய ஒரு அரசியல் சக்தி இல்லை என்பதனாலேயே தமிழ் மக்கள் வேறு வழியின்றி தேசிய மக்கள் சக்தியின் பக்கம் திரும்பினார்கள். ஜனாதிபதி தேர்தலில் அநுரா குமார திசாநாயக்கவை பெருமளவில் ஆதரிக்காத அந்த மக்களுக்கு அவரின் வெற்றிக்கு பிறகு தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பதில் நாட்டம் காட்டக்கூடிய ஒரு சூழ்நிலை உருவானது.

பாராளுமன்ற தேர்தல் பிரசாரங்களுக்கு தங்களிடம் வந்த தமிழ்த் தலைவர்களிடம் பல பகுதிகளில் தமிழ் மக்கள் தாங்கள் இந்த தடவை தேசிய மக்கள் சக்திக்கே வாக்களிக்கப் போவதாக நேரடியாகவே கூறினார்கள். தங்களது மக்களின் உணர்வுகளை சரியான முறையில் மதிப்பிடுவதற்கு தவறிய அந்த தலைவர்கள் வழமை போன்றே தமிழ்க் கட்சிகளுக்கு மாத்திரமே தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கையில் மெத்தனமாக இருந்து விட்டார்கள்.

தவறான ஆட்சிமுறைக்கும் ஊழல்தனமான அரசியல் கலாசாரத்துக்கும் பொறுப்பான பாரம்பரியமான பிரதான அரசியல் கட்சிகளை தென்னிலங்கை மக்கள் நிராகரிப்பதற்கு சிறந்த மாற்றுச் சக்தியாக தேசிய மக்கள் சக்தி விளங்கியது. அறகலய மக்கள் கிளர்ச்சிக்கு பின்னரான காலப்பகுதியில் மாற்றங் கண்ட அரசியல் சூழ்நிலையை அனுகூலமாக பயன்படுத்தி தேசிய மக்கள் சக்தி தன்னை ஒரு பாரிய அரசியல் இயக்கமாக வளர்த்துக் கொண்டது.

அதேபோன்றே வடக்கு, கிழக்கிலும் தமிழ் அரசியல் கட்சிகளை நிராகரிப்பதற்கு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த தமிழ் மக்களுக்கு தேசிய மக்கள் சக்தியை தவிர வேறு மாற்று இருக்கவில்லை. கடந்தகால அனுபவங்களில் இருந்து படிப்பினைகளைப் பெற்று நிலைவரங்கள் வேண்டி நிற்பதற்கு ஏற்றமுறையில் அணுகுகுறைகளை வகுக்கும் பழக்கமோ அல்லது பக்குவமோ இல்லாத தமிழ்க் கட்சிகள் தற்போது மக்கள் புகட்டியிருக்கும் பாடத்தில் இருந்தாவது எதையாவது படித்துக் கொள்வார்களோ தெரியவில்லை.

இது இவ்வாறிருக்க, இனவாத அரசியலும் மதத் தீவிரவாதமும் மீண்டும் தலையெடுப்பதற்கு ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று கடந்த வியாழக்கிழமை புதிய பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தில் தனது அரசாங்கத்தின் கொள்கை விளக்கவுரையை நிகழ்த்திய ஜனாதிபதி திசாநாயக்க கூறினார். இனவாதமும் மதவாதமும் மீண்டும் தலையெடுக்காமல் இருப்பதை உறுதிசெய்வது என்பது அவரது அரசாங்கத்தின் அணுகுமுறைகளிலும் செயற்பாடுகளிலுமே முற்று முழுதாக தங்கியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

இன, மத வேறுபாடுகளை கடந்து மக்கள் தனது அரசாங்கத்துக்கு வழங்கியிருக்கும் மகத்தான ஆதரவு இனவாதம் மீண்டும் தலையெடுக்காமல் இருக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க உதவும் என்று ஜனாதிபதி நம்புகிறார் என்றால் அதே இனவாதம் தோற்றுவித்த பிரச்சினைகளுக்கு காலம் தாழ்த்தாமல் தீர்வுகளை காண்பது அவசியமானதாகும். சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளையும் மனக் குறைகளையும் மதிக்காத தென்னிலங்கை அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டியது ஜனாதிபதி தனது குறிக்கோளை அடைவதற்கான முதற் தேவையாகும்.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு இதுகாலவரையில் முன்னெடுக்கப்பட்ட சகல முயற்சிகளையும் எதிர்த்த கசப்பான கடந்த காலத்தில் இருந்து விடுபடுவதற்கான தெளிவான அறிகுறிகளை இதுவரையில் தேசிய மக்கள் சக்தி குறிப்பாக ஜே.வி.பி. காண்பிக்கவில்லை. அண்மைக் காலத்தில் அரசியலமைப்புக்கான 13வது திருத்தம் தொடர்பில் தோன்றிய சர்ச்சைகளின் போது தேசிய மக்கள் சக்தி வெளிப்படுத்திய நிலைப்பாடுகள் இதற்கு பிந்திய சான்றுகளாகும்.

முன்னைய ஜனாதிபதிகளில் எந்த ஒருவருக்குமே வழங்கியிராத பிரமாண்டமான ஆணையை திசாநாயக்கவுக்கு மக்கள் வழங்கியிருக்கிறார்கள். சட்டத்தில் திருத்தங்களைச் செய்தோ அல்லது புதிய அரசியலமைப்பை அறிமுகம் செய்தோ இனப்பிரச்சினை விவகாரத்தில் தீர்வுகளை காண்பதற்கு எந்த தடையும் அவருக்கும் அரசாங்கத்துக்கும் கிடையாது. அரசியல் துணிவாற்றல் மாத்திரமே அவசியமாகிறது. பெரும்பாலான தமிழ்க் கட்சிகளை நிராகரித்து தேசிய மக்கள் சக்தியை ஆதரித்திருக்கும் தமிழ் மக்களுக்கு (22ம் பக்கம் பார்க்க)

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் என்றால் என்ன?

## ஒருவரைக் கைது செய்ய முடியுமா? அமெரிக்கா ஏன் உறுப்பினராக இல்லை?

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ஐசிசி) என்பது இனப்படுகொலை, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க் குற்றங்களுக்கு எதிராக விசாரணை நடத்தும் அதிகாரம் கொண்ட சர்வதேச நீதிமன்றமாகும்.

நவம்பரில் இஸ்ரேலின் பிரதமர், அந் நாட்டின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் ஹமாஸின் ராணுவத் தளபதி ஆகியோருக்கு எதிராக ஐசிசி பிடிவாரண்ட்களை பிறப்பித்துள்ளது.

### ஐ.சிசி என்ன செய்கிறது?

அடாவடி தலைவர்கள் செய்யும் அட்டூழியங்களுக்குப் பொறுப்புகூற செய்வதற்காக நெதர்லாந்தில் உள்ள தி ஹேக் நகரில் இந்த நீதிமன்றம் உருவாக்கப்பட்டது.

யுகஸ்லாவியப் போர்கள் மற்றும் ருவாண்டா இனப்படுகொலைக்குப் பிறகு உலகத் தலைவர்கள் இந்த நீதிமன்ற உருவாக்கத்திற்கு அதிகளவில் அழுத்தம் கொடுத்தனர்.

ஒரு பிரச்சனையில், நாட்டின் அரசால் வழக்குத் தொடர முடியாத போது அல்லது விரும்பாத போது மட்டுமே இந்த நீதிமன்றம் அந்த விவகாரத்தில் தலையிடும். நீதி பெற உதவும் கடைசி முயற்சியாக இந்த நீதிமன்றம் செயல்படும்.

நீதிமன்றத்தை நிறுவிய ரோம் சட்டம், நடைமுறைக்கு வந்த ஜீலை 1, 2002 க்குப் பிறகு நடந்த குற்றங்களை மட்டுமே இந்த நீதிமன்றத்தால் விசாரிக்க முடியும். ரோம் சட்டம் 124 நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் 34 நாடுகள் இதில் கையொப்பமிட்டுள்ளனர். எதிர்காலத்தில் பலரும் இந்தச் சட்டத்தை அங்கீகரிக்கலாம். இருப்பினும் இஸ்ரேலும் அமெரிக்காவும் ஐசிசியில் உறுப்பினராக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### ஐசிசி விசாரித்த வழக்குகள் என்ன?

மார்ச் 2012 இல், காங்கோ ஜனநாயகக் குடியரசில் செயல்பட்ட ஒரு ஆயுதக் குழுவின் தலைவரான 'தாமஸ் லுபாங் காவுக்கு' எதிராக நீதிமன்றத்தின் முதல் தீர்ப்பு அமைந்தது. அந்நாட்டில் நடந்த மோதலில் குழந்தைகளைப் பயன்படுத்தியது தொடர்பான போர்க் குற்றங்களுக்காக. அவர் 'குற்றவாளி' என தீர்ப்பளிக்கப்பட்டது. ஜீலை மாதம், 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டது. ஐசிசியின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்ட மற்றோர் முக்கிய நபர்,'லாரன்ட் பாக்போ'. இவர் ஐவரி கோஸ்டின் முன்னாள் அதிபர்.

2011 இல் கொலை, பாலியல் வன்கொடுமை, துன்புறுத்தல் மற்றும் பிற மனிதாபிமானமற்ற செயல்களில் ஈடுபட்டதற்கான குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டன. ஆனால் அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் அவர் விடுவிக்கப்பட்டார்.

உகாண்டாவின் கிளர்ச்சி இயக்கமான லார்ட்ஸ் ரெசிஸ்டன்ஸ் ஆர்மியின்'' (Lord's Resistance Army) தலைவர் ஜோசப் கோனி, ஐசியால் தேடப்பட்டவர்களில் ஒருவர் .

அவர் மீது மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், ஆயிரக்கணக்கான குழந்தைகளைக் கடத்தியது மற்றும் போர்க் குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்காக முன்னாள் சூடான் அதிபர் உமர் அல் பஷீருக்கு எதிராக நீதிமன்றத்தில் பிடிவாரண்ட் உள்ளது ஆப்பிரிக்க ஒன்றியத்தால் ஐசிசி விமர்சிக்கப்பட்டது. குறிப்பாக ஆப்பிரிக்காவில் அதிக கவனம் செலுத்தியதற்காக ஐசிசியை ஆப்பிரிக்கா விமர்சித்தது. ஆனால், எந்த சார்பு நிலையும் தங்களுக்கு இல்லை என ஐசிசி இந்த விமர்சனங்களை மறுக்கிறது.

சில வழக்குகள் பாதிக்கப்பட்ட நாட்டினால் சுயமாக ஐசிசிக்கு கொண்டு வரப்பட்டவை. சில வழக்குகளை ஐ.நா



ஐசிசியின் கவனத்துக்கு கொண்டு வரும். 2023ல் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினுக்கு ஐசிசி பிடிவாரண்ட் பிறப்பித்தது . அவர் போர்க் குற்றங்களுக்குக் காரணமானவர் என்றும் யுக்ரேனில் இருந்து ரஷ்யாவிற்கு குழந்தைகளை சட்டவிரோதமாக நாடு கடத்துவதில் தொடர்பு கொண்டுள்ளார் என்றும் ஐசிசி குற்றம் சாட்டுகிறது.

### நீதிமன்றம் எவ்வாறு விசாரிக்கின்றது?

சந்தேக நபர்களைக் கண்டு பிடித்து கைது செய்ய ஐசிசிக்கு சொந்தமாக போலீஸ் படை இல்லை. அதனால் குற்றவாளிகளைக் கைது செய்வதற்கும் அவர்களை நீதிமன்றம் இருக்கும் ஹேக் நகருக்கு மாற்றுவதற்கும் ஐசிசி, தேசிய போலீஸ் சேவைகளை நம்பியிருக்க வேண்டும்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலால் அல்லது ஐசிசியை அங்கீகரித்த நாடுகளால் ஒரு வழக்கு பரிந்துரைக்கப்படும் போது வழக்கறிஞர் தனது விசாரணையைத் தொடங்குகிறார். அவர் தனிப்பட்ட நடவடிக்கைகளும் எடுக்கலாம், ஆனால் அந்த வழக்கை நீதிபதி குழு அங்கீகரித்திருக்க வேண்டும்.

ஐசிசியை அங்கீகரித்துள்ள நாடுகளால் வழக்கறிஞர் மற்றும் நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஒரு வழக்கு விசாரணைக்கு வரும் போது குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க வேண்டும். அனைத்து ஆதாரங்களையும் பரிசீலித்து, மூன்று நீதிபதிகள் தீர்ப்பு வழங்குவர் .

குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், தண்டனை வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

### அமெரிக்கா ஏன் ஐசிசி உறுப்பினராக இல்லை?

அரசியல் காரணங்களால் தூண்டப்பட்ட அல்லது அற்பமான வழக்குகளுக்கு தங்கள் வீரர்கள் உட்படுத்தப் படலாம் என்று ஐசிசியை நிறுவுவதற்கான பேச்சுவார்த்தைகளின் போது, அமெரிக்கா வாதிட்டது.

அமெரிக்கத் துருப்புக்களுக்கு வழக்கிலிருந்து 12 மாதங்கள் விலக்கு அளிக்கப்படும். ஆண்டு தோறும் அது புதுப்பிக்கப்படும் என்ற முடிவுக்கு ஜீலை 2002-ல் ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் ஒப்புதல் அளித்தது. இந்த முடிவு, மிகவும் விமர்சிக்கப்பட்டது.

ஜீன் 2004 இல், அமெரிக்கத் துருப்புக்கள், இராக் கைதிகளை துன்புறுத்தும் படங்கள் உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அது வெளியான பின்னர், அப்போதைய ஐ.நா. பொதுச் செயலாளர் கோ.ஃபி அன்னான் தூண்டுதலால், பாதுகாப்பு கவுன்சில் தான் அளித்த விலக்கைப் புதுப்பிக்க மறுத்தது.

அமெரிக்காவின் தலையீடு இல்லாமல் நீதிமன்றத்தின் செயல்பாடு பலவீனமானதாகக் கருதப்படுகிறது. ஆனால் குறிப்பிட்ட வழக்குகளில் நீதிமன்றத்துடன் அமெரிக்க ஒத்துழைக்கின்றது.

யுக்ரேனில் ரஷ்யாவின் போர்க்குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களை நீதிமன்றத்துடன் பகிர்ந்து கொள்ளுமாறு அமெரிக்க உளவுத்துறை நிறுவனங்களுக்கு அதிபர் ஜோ பைடன் உத்தரவிட்டுள்ளார்.

### வேறு எந்த நாடுகள் ஐசிசியில் சேரவில்லை?

பல முக்கியமான நாடுகள் ஐசிசியின் அதிகார வரம்பில் இல்லை. சீனா, இந்தியா, பாகிஸ்தான், இந்தோனீசியா மற்றும் துருக்கி உள்ளிட்ட சில இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை.

இஸ்ரேல், எகிப்து, இரான் மற்றும் ரஷ்யா உட்பட மற்ற நாடுகள் கையெழுத்திட்டுள்ளன, ஆனால் அதை அங்கீகரிக்கவில்லை.

### ஒவ்வொரு நாட்டின் நீதிமன்றங்களையும் ஐசிசி எவ்வாறு பாதிக்கின்றது?


உடன்படிக்கையில் சேரும் நாடுகள், அனைத்து குற்றங்களையும் தாங்களே விசாரிக்க முடியும் என்பதை உறுதிப் படுத்திக் கொள்ள விரும்பலாம். இல்லையெனில் ஐசிசி நீதிமன்றமும் அதில் தலையிடலாம்.

சில அரசாங்கங்கள் ஏற்கனவே தங்கள் சொந்த நீதி அமைப்புகளில் மாற்றங்களைச் செய்வதற்கான சட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளன.

### ஐசிசிக்கு நிதி அளிப்பது யார்?

உலக நாடுகள் ஐ.நா.விற்கு பங்களிப்பதைப் போலவே ஐசிசியில் பங்கேற்கும் நாடுகளும் தங்களது நாட்டின் பொருளாதார வசதியின் அடிப்படையில் ஐசிசிக்கு நிதி கொடுப்பர்.

குறிப்பாக அமெரிக்கா இல்லாததால், ஐசிசிக்கு மற்ற நாடுகள் அதிக நிதி செலுத்த வேண்டியுள்ளது. ஐசிசிக்கு மிகப்பெரிய அளவில் நிதி வழங்கும் நாடுகளாக பிரிட்டன், ஜப்பான், ஜெர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் உள்ளன. நன்றி:- பிபிசி


சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# தமிழரசுக்கட்சியைத் தொலைத்த வடக்கும் தேடி எடுத்த கிழக்கும்

- அழகு குணசீலன் -

தமிழ்த்தேசிய அரசியல் வடக்கில் மக்களால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. யாழ். வன்னி மாவட்டங்களில் தமிழரசு (2). காங்கிரஸ் (1). ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு(1). இணைந்து நான்கு ஆசனங்களை பெற்றுள்ளன. கிழக்கில். இதற்கு மாறாக மக்கள் பெரும் அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர். தமிழரசு மட்டும் தனித்து ஐந்து ஆசனங்கள். இந்த முடிவு தமிழ்த் தேசிய அரசியலின் காப்பாளர்கள் யார்? என்ற கேள்வியை எழுப்புகிறது.

வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம். வன்னி தேர்தல் மாவட்ட முடிவுகளை பாருங்கள். யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் பழம்பெரும் தமிழரசுக்கட்சி வரலாற்றில் முதல் தடவையாக தென்னிலங்கை கட்சி ஒன்றினால் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. என்.பி.பி. அளிக்கப்பட்ட வாக்குகளில் வெறும் 25 வீதத்தை பெற்று ஆறு ஆசனங்களில் 50 வீதமான மூன்று ஆசனங்களை பெற்றிருக்கிறது.

அளிக்கப்பட்ட 60 வீதமான வாக்குகளில் அரைவாசிக்கும் குறைவாகவே என்.பி.பி பெற்ற வாக்குகள் உள்ளன. ஆனால் தமிழரசுக்கட்சி (19.5) அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (8.6). சுயேட்சை குழு 17 (8.6) வீத வாக்குகளை பெற்று மிகுதி மூன்று ஆசனங்களில் தலா ஒரு ஆசனத்தை பெற்றுள்ளன. இந்த மூன்றும் பெற்ற வாக்குகள்



36.7 வீதம். இத்துடன் ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு (சங்கு) பெற்ற (6.9) வாக்குகளையும் சேர்த்தால் இது 43. 6 வீதம். விகிதாசார தேர்தல் முறை சார்ந்த போனஸ் ஆசன ஒதுக்கீட்டின் அரசியல் சட்ட இருட்டறை.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகளின் அடிப்படையில் நோக்கினால் என்.பி.பி. பெற்ற 80.830 வாக்குகளோடு ஒப்பிடுகையில் மற்றைய மூன்று ஆசனங்களையும். ஆசனமற்ற சங்கு பெற்ற வாக்குகளும் சுமார் 1.40.000க்கும் அதிகமானவை. இந்த அடிப்படையில் நோக்கும் போது மக்கள் தமிழ்த் தேசிய அரசியலை உரிமைக் கோரிக்கையை நிராகரித்து விட்டார்கள் என்று நாட்டில் வீசிய என்.பி.பி. அலையின் தாக்கத்தினால் ஏற்பட்ட இந்த விளைவைக் கொண்டு சொல்ல முடியாது. ஏனெனில் கிழக்கில் மக்கள் தமிழ்த்தேசியத்தை காப்பாற்றியிருக்கிறார்கள்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் தென்னிலங்கை கட்சி ஒன்று இந்த வெற்றியை பெறுவதற்கு கடந்த பதினைந்து ஆண்டுகளாக தமிழ்த்தேசிய அரசியலில் ஏற்பட்ட பின்னடைவு ஒரு முக்கியமான காரணம். அதேவேளை இணக்க அரசியல். அபிவிருத்தி பேசிய ஈ.பி.டி.பி. அங்கயன் அணி. மற்றும் தென்னிலங்கை கட்சிகளையும் அவர்கள் தமிழ்த்தேசிய கட்சிகளை விடவும் மிக மோசமாக நிராகரித்துள்ளனர். என்பதும் மறுப்பதற்கில்லை.

தமிழரசுக்கட்சியின் கோரிக்கையின் பேரில் சஜீத் பிரேமதாசவுக்கும். ஈ.பி.டி.பி.யின் கோரிக்கையின் பேரில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதி தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகள் கொள்கை அடிப்படையிலானதல்ல என்பதையும் இந்த முடிவு காட்டுகிறது. என்.பி.பி.யின் தேர்தல் கால நடவடிக்கைகளும். வாக்குறுதிகளும் நீண்ட காலமாக தமிழ்த்தேசிய. மற்றும் இணக்க மற்றைய தென்னிலங்கை கட்சிகளின் மீதான நம்பிக்




கையை இழக்கச் செய்து புதிய ஒரு வாய்ப்பை என்.பி.பி.க்கு வழங்கிப் பார்க்க முன் வந்ததன் ஒரு விளைவு. எதிர்காலத்தில் தமிழ்த்தேசிய கட்சிகள் இழந்த நம்பிக்கையை எப்படி மீளப் பெறப் போகின்றன என்பதும். வழங்கிய வாக்குறுதிகளை என்.பி.பி. எவ்வாறு காப்பாற்றப் போகிறது என்பதுமே யாழ்ப்பாணத்தில் இந்த கட்சிகளின் இருப்பை தீர்மானிப்பதாக அமையும். ஆனால் யாழ். தமிழ்த்தேசிய கோட்டைக்குள் என்.பி.பி. நடாத்தியிருக்கின்ற இந்த ஊடுருவல் தாக்குதல் தமிழ்த் தேசிய அரசியலின் தற்காலிக நிராகரிப்பு என்று கொண்டாலும் குறைத்து மதிப்பிடக்கூடிய ஒன்றல்ல.

வன்னி தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசிய அரசியல் மூன்றாவது இடத்திற்கு பின் தள்ளப்பட்டுள்ளது. தமிழரசுக்கட்சி சுமார் 30.000 வாக்குகளையும் ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு சுமார் 21.000 வாக்குகளையும் பெற்று தலா ஒரு கதிரையை பிடித்துள்ளன. ஆறு ஆசனங்களில் என்.பி.பி. இரண்டு. ஐக்கிய மக்கள் சக்தி ஒன்று. சிறிலங்கா தொழிற்கட்சி ஒன்று என மற்றைய நான்கு ஆசனங்களையும் பெற்றுள்ளன. இறுதி யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட வன்னி நிர்வாக மாவட்டங்களான மன்னார். வவுனியா. முல்லைத்தீவில் இது தமிழ்த்தேசிய அரசியல் தோல்வியாக தோன்றினும் இங்கு வன்னியின் சிங்கள. முஸ்லீம். மலையக மக்களின் வாக்காளர் பங்களிப்பு இந்த தேசிய கட்சிகளின் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைகிறது.

மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் முடிவானது சகல எதிர்பார்ப்புக்களையும் நிராகரித்து தமிழ்த்தேசிய அரசியல் நிலைப்பாட்டிற்கு மக்கள் மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்கியிருக்கிறார்களா ? என்ற கேள்வியை எழுப்புவதாக உள்ளது. பிறந்த வீட்டில் தோற்ற தமிழரசு வளர்ந்த வீட்டில் வெற்றி பெற்றுள்ளது. 98.975(33.8) வாக்குகளை வழங்கி மூன்று ஆசனங்களுக்கு வழி வகுத்ததன் மூலம் இலங்கையின் அனைத்து தேர்தல் மாவட்டங்களிலும் என்.பி.பி. வகித்த முதன்மை நிலையை மக்கள் தமிழரசுக்கட்சிக்கு வழங்கி சாதனை படைத்திருக்கிறார்கள்.

இந்த சாதனையும். என்.பி.பி.யின் புது வரவும். கவர்ச்சியும் ரி.எம்.வி.பி. யின் ஆசன இழப்புக்கு காரணமாக அமைந்துள்ளது. என்.பி.பி. தமிழ்த்தேசிய அரசியல் மீதான வெறுப்பை வடக்கு கிழக்கில் அறுவடை செய்துள்ள நிலையில் மட்டக்களப்பில் அது சாத்தியப்படவில்லை. ஆனால் ஊழலுக்கு எதிராகவும். ரணில் -ராஜபக்ச ஆட்சியின் பங்காளராகவும் மட்டக்களப்பில் என்.பி.பி பிள்ளையானை 55.498 (19.3) வாக்குகளை பெற்று தோல்வியடையச் செய்துள்ளது.

கடந்த தேர்தலில் பெற்ற வாக்குகளில் ரி.எம்.வி.பி. சுமார் 50 வீதத்திற்கும் அதிகமாக இழந்து 31. 286(10.9) வாக்குகளை மட்டுமே பெற்று நான்காவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. தனியாக மட்டக்களப்பு மாவட்டத்தை மட்டும் முதன்மைப்படுத்திய ரி.எம்.வி.பி.க்கு எதிர்காலம் குறித்த ஒரு பெரும் சவாலாக இது இருக்கப் போகிறது. என்.பி.பி. தமிழரசுக்கட்சி அலைக்கு மத்தியிலும் முஸ்லீம் காங்கிரஸ் 40.139 (14.0) வாக்குகளை பெற்று தனது பிரதிநிதித்துவத்தை காப்பாற்ற முடிந்துள்ளது.

திருகோணமலையில் என்.பி.பி.. எஸ்.ஜே.வி.யினால் மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்ட தமிழரசுக்கட்சி 34.168 (17.0) வாக்குகளை பெற்று ஒரு இடத்தை பெற்றுள்ளது. எனினும் இது கடந்த தேர்தலிலும் மூன்றாவது இடத்தில் சம்பந்தர் தலைமையில் பெற்ற வாக்குகளை விடவும் (39.570 -18.5 வீதம்) சுமார் 5.000 வாக்குகள் குறைவானது. அதுவும் சங்கு அணியுடன் போட்டி தவிர்ப்பு செய்து ஓரணியில் போட்டியிட்டதனாலேயே திருகோணமலையில் தமிழ்ப்பிரதிநிதித்துவம் காப்பாற்றப்பட்டுள்ளது. இல்லையேல் இது சாத்தியப்பட்டிருக்க வாய்ப்பில்லை.

அம்பாறையில் வீடும். சங்கும் தனித்து போட்டியிட்ட போதும் தமிழரசுக்கட்சி 33.632 (9.27) வாக்குகளை பெற்று வெற்றி அடைந்துள்ளது அம்பாறை மாவட்ட தமிழர்களுக்கு ஒரு நற்செய்தி. சங்கு. படகு. கார் . சைக்கிள் வீணை போன்றவை அங்கு போட்டியிட்ட போதும் தமிழரசுக்கட்சியின் வெற்றியை அவற்றால் தடுக்க முடியவில்லை. இவை தேசிய பட்டியல் வாக்குச் சேகரிப்பை இலக்காகக் கொண்டே போட்டியிட்டன.

தமிழரசுக் கட்சி கடந்த தேர்தலில் இழந்த பிரதிநிதித்துவத்தை இம்முறை பெற்றுள்ளது. கடந்த தேர்தலில் தமிழரசு. கருணா தரப்பு போட்டி பலமாக இருந்ததால் தமிழர் வாக்குகள் ஏற்கக்குறைய சமமாக பிரிக்கப்பட்ட நிலையில் வெற்றி பெறமுடியவில்லை. இம்முறையும் தமிழ் வாக்காளர்கள் தொகையுடன் ஒப்பிடுகையில் தமிழரசு பெற்ற வாக்குகள் குறைவானவையே.

காஸ் சிலிண்டர் 33.544 (9.24) வாக்குகளை பெற்றுள்ளது. ஆக. 80 வாக்குகளே தமிழரசுக்கட்சியின் வெற்றியை தீர்மானித்துள்ளன. இல்லையேல் 2020 கதையே 2024 கதையாகவும் இருந்திருக்கும்.

மொத்தத்தில் என்.பி.பி. அலையில் தமிழ்த்தேசிய அரசியல் அள்ளுண்டு போய் விட்டது என்று சொல்லுவதற்கு இந்த தேர்தல் முடிவுகள் மட்டும் போதுமானவை அல்ல. என்.பி.பி.யின் எதிர்கால செயற்பாடும். வாக்குறுதிகளும். இனப்பிரச்சினைக்கான தீர்வு அணுகுமுறைகளுமே அதனை தீர்மானிப்பதாக அமையும்.

ஒப்பீட்டளவில் பிராந்திய. சிறிய முஸ்லீம் கட்சிகளை விடவும் குறிப்பாக அம்பாறையில் அதாவுலாலாவின் மக்கள் காங்கிரஸ் (மயில்) 33. 911(9.34) வாக்குகளை பெற்று வெற்றி பெற்றுள்ளது. இந்த நிலையில் ஈ.பி.டி.பி. ரி.எம்.வி.பி. என்பனவற்றால் அதனை சாதிக்க முடியவில்லை.

தேசிய பட்டியல் கணிப்பீடு தமிழரசுக் கட்சிக்கு ஒரு ஆசனத்தை ஒதுக்கியுள்ளது. தமிழரசு வடக்கு கிழக்கில் பெற்ற ஏழு ஆசனங்கள் இத்துடன் எட்டாகியுள்ளதுஇதில் மூன்று மட்டக்களப்பு (3) அம்பாறை(1). திருகோணமலை (1) ஐந்து ஆசனங்கள். பாராளுமன்ற குழுவில் கிழக்கு மாகாண உறுப்பினர்களே அதிகம் 5+2=7 ( 7:5)

தமிழரசுகட்சிக்கு வடக்கு கிழக்கில் கிடைத்த மொத்த வாக்குகள் 2.57.000.

இதில் வடக்கில் 93.000. மட்டக்களப்பில் மட்டும் தமிழரசு பெற்ற 96.975 வாக்குகளையும் விடவும் இவை குறைவானவை.

மொத்தமாக கிழக்கில் தமிழரசு 1.62. 000 வாக்குகளை பெற்றுள்ளது. வடக்கு தமிழர்கள் அநுர அலையில் அள்ளுண்டு போன நிலையில் தமிழ்த் தேசிய அரசியலின் காவலர்களாக கிழக்கு தமிழ் மக்களே உள்ளனர்.

இந்த நிலையில்.......!


தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற குழுத்தலைவர் பதவி கிழக்கிற்கு சாணக்கியனுக்கு வழங்கப்படுமா...?

தமிழரசுக்கட்சியின் தேசியப்பட்டியலுக்கு காரணம் கிழக்கு மக்கள் அந்த ஆசனம் கிழக்கிற்கே வழங்கப்படுமா?


தமிழரசுக்கட்சிக்கு கிழக்கு தலைமை தாங்குமா?

இந்த கேள்விக்கான பதிலே என்.பி.பி. பேசிய மாற்றத்திற்கான அரசியலை நெல்லுக்கிறைத்த நீராய் புல்லுக்கும் அங்கு புசியச் செய்யும்.


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எந்த ஒரு காரியத்திலும் சரியான முடிவுக்கு வர முடியாமல் இருந்த தடுமாற்றம் நீங்கும். சாமர்த்தியமாக எதையும் சமாளிக்கும் துணிச்சல் வரும். எதிர்ப்புகள் குறையும். தொழில், வியாபாரம் சற்று நிதானமாக நடக்கும். எதிர்பார்த்த லாபம் இருந்தாலும் தொழில் தொடர்பான செலவும் கூடும். உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்ற மான பலன் காண்பர். புதிய வேலை பற்றிய சிந்தனை அதிகரிக்கும்.





ரிஷபராசி அன்பர்களே! அதிக கோபத்தால் வீண்பகை உண்டாகலாம். அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி செல்வது நல்லது. ஆடம்பர செலவுகள் ஏற்படும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணிச்சுமை, இடமாற்றம், அலைச்சல் போன்றவை இருக்கக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். பிள்ளைகள் பெருமை சேர்ப்பார்கள்.




மிதுனராசி அன்பர்களே! காரியங்கள் தாமதமாக நடந்தாலும் வெற்றிகரமாக நடக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான நெருக்கடிகளை சந்திக்க வேண்டி வரும். புது வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக முடியும். குடும்பத்தில் இருப்ப வர்களின் செய்கைகள் உங்களது கோபத்தை தூண்டுவதாக இருக்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்படும். பிள்ளைகளை அனுசரித்து செல்வது நல்லது.





கடகராசி அன்பர்களே! பிடிவாதத்தை விட்டு விடுவது காரிய வெற்றிக்கு உதவும். கடிதப் போக்குவரத்து நன்மை தரும் தொழில் வியாபாரத்தில் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது. எதிர் பார்த்த பணம் கைக்கு வர தாமதம் ஆகலாம். உத்யோகத்தில் இருப்ப வர்களுக்கு நிதானம் தேவை. சக ஊழியர்களுடன் சாமர்த்தியமாக பழகி காரிய அனுகூலம் அடைவீர்கள். குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் தீரும். உறவினர்கள் தேடி வருவார்கள்.




சிம்மராசி அன்பர்களே! எடுத்த முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். எண்ணியபடி செயல்களை செய்து காரிய வெற்றி காண்பீர்கள். ஆன்மிக பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். திருமண முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். தொழில் வியாபாரம் சுமாராக இருக்கும். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். நீண்ட நாட்களாக இருந்து வந்த மனக் கிலேசங்களில் தெளிவான நிலை ஏற்படும்.




கன்னிராசி அன்பர்களே! காரிய தாமதம் ஏற்படும். வீண் மனக் கவலை நீங்கும். வாகனங்களில் செல்லும்போது கவனம் அவசியம். நண்பர்கள் மூலம் கிடைக்க வேண்டிய உதவிகள் தாமதப்படும். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். எதிர் பார்த்த நிதி உதவி கிடைக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும். உத்யோகத்தில் தடங்கல்கள் ஏற்படும்.




துலாம்ராசி அன்பர்களே! எதிர்ப்புகள் மறையும். பகை பாராட்டியவர்கள் பகையை மறந்து நட்புக் கரம் நீட்டுவார்கள். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சனைகள் குறையும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். தொழில் வியாபாரம் சீராக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும். பதவி உயர்வு கிடைக்கலாம். குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபப்படாமல் நிதானமாக பேசி அனுசரித்து செல்வது நல்லது.





விருச்சிகராசி அன்பர்களே! மன உறுதி அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்களை அடைவதில் இருந்த தடைகள் நீங்கும். உயர் நிலையில் உள்ளவர்களுடன் இருந்து வந்த மன வருத்தம் நீங்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைய வேண்டி இருந்தாலும் முடிவில் லாபம் கிடைக்கும். எதிர்பார்த்த கடன் வசதி கிடைக்கும். தொழில் வியாபாரத்திற்கு புதியதாக இடம் வாங்குவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் அலைச்சலை, வேலை பளுவை சந்திக்க நேரிடும்.








தனுசுராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இருந்த பிரச்னை குறையும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். வாக்கு வன்மை நன்மையை தரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறுகள் நீங்கும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். குடும்பத்தில் இருப்பவர்கள் எதையும் வெளிக்காட்டாமல் இன்முகம் கொடுத்து பேசுவார்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்த வருத்தங்கள் நீங்கும்.




மகரராசி அன்பர்களே! முடங்கி கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பிடிக்கும். நெருக்கடியான நேரத்தில் உறவினர்கள், நண்பர்கள் உங்களுக்கு கை கொடுப்பர். தொழில் எதிர்பார்த்த அளவு நடக்கா விட்டாலும், லாபம் குறையாமல் இருக்கும். பங்குதாரர்களுடன் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கும். திறமையான செயல்பட்டால் பாராட்டு கிடைக்கும். குடும்பத்தினர் எதிர்பாராத விருந்தினர் வருகையால் வாக்குவாதங்கள் ஏற்படலாம்.




கும்பராசி அன்பர்களே! எடுத்துக் கொண்ட முயற்சிகளில் காரிய தடை தாமதம் ஏற்படும் உஷ்ண சம்பந்தமான நோய் ஏற்படும். வீண் வழக்கு விவகாரங்கள் வரலாம். எச்சரிக்கையாக செயல்படுவது நல்லது. பார்ட்னர்களுடன் சேர்ந்து தொழில் செய்பவர்கள் கவனமாக செயல்படுவது நல்லது. கடன் தொல்லை தலை தூக்கலாம். எச்சரிக்கையாக இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிகாரம் கிடைக்கும்.




மீனராசி அன்பர்களே! மற்றவர்களின் உதவியால் காரிய அனுகூலம் உண்டாகும். இதுவரை இருந்த தொல்லைகள் நீங்கும். நீண்ட தூரப் பயணங்களால் லாபம் உண்டாகும். மனதில் தைரியம் பிறக்கும். வாக்கு வன்மை ஆதாயத்தை பெற்று தரும். தொழில் வியாபாரத்தில் இருப்ப வர்கள் கூடுதல் செலவை சந்திக்க நேரிடும். புதிய ஆர்டர்கள் கிடைப்பது வேகமாகும். தேவையான பணஉதவி கிடைக்கலாம். நிலுவையில் உள்ள பணம் வரும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# பிராந்திய அரசியலின் முடிவும்

(17ம் பக்கத் தொடர்ச்சி) வந்த அரசியற் கட்சிகளின் தவறுகளுக்கான கூட்டுத் தண்டனையாகவே தற்போதைய தேர்தல் முடிவுகள் அமைந்திருக்கின்றன. இது கூடச் சடுதியாக ஏற்பட்ட ஒன்றல்ல. இதற்கு முன் கடந்த தேர்தல்களின் போதே இந்த வீழ்ச்சியை மாற்றத்தை மக்கள் வெளிப்படுத்தியிருந்தனர்.

கடந்த தேர்தல்களில் யாழ்ப்பாணத்தில் டக்ளஸ் தேவானந்தா, விஜயகலா மகேஸ்வரன், அங்கயன் ராமநாதன் போன்றோரும் கிழக்கில் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), வியாழேந்திரன் போன்றோரும் இதற்கான அடையாளங்களாகும்.

அதைக் கூட இந்தத் தலைமைகள் எதுவும் கணக்கிற் கொண்டு திருந்திக் கொள்ளவில்லை. விளைவு இப்போது ஒட்டு மொத்தமாக ஒரு பாரிய வீழ்ச்சியையும் மாற்றத்தையும் சந்திக்க வேண்டி நேர்ந்திருக்கிறது. ஆக பிராந்திய அரசியலைப் பலவீனப் படுத்தியதில் முக்கியமான பங்கு அந்த அந்த அரசியற் குறைபாட்டுக்கும் அரசியலைப் பிரதிநிதித்துவப்படுத்தியோருக்கும் அதை மேற்கொண்டோருக்குமே உரியது. பழியை பிறரின் மீது போட்டுத் தப்பி விட முடியாது.

இப்போது நிலைமை கையை மீறி விட்டது. இது பிராந்திய அரசியலைக் கடந்த தேசியவாத அரசியலின் காலம். மக்கள் இலங்கை முழுவதற்குமான பொதுப்பிரச்சினைகளில் ஒன்றிணையத் தொடங்கி விட்டனர். அவர்களை நேரடியாகத் தாக்கும் பொருளாதாரப் பிரச்சினைகள், ஊழல், அதிகார துஸ்பிரயோகம், சூழல் பாதுகாப்பு, சமத்துவமின்மை, பன்மைத்துவத்துக்கான இடம், வேலை வாய்ப்பு போன்றவற்றையே தமது அரசியற் பரப்பாகக் கொள்ளத் தொடங்கி விட்டனர். அதனால் அதற்குரிய அரசியலையும் அரசியற் தரப்பையும் அவர்கள் தெரிவு செய்துள்ளனர்.

இதிற் கவனிக்க வேண்டிய ஒரு முக்கியமான விடயம் ஒன்று உள்ளது அரசியலில் தீர்மானங்களை மேற்கொள்ளக் கூடிய புதிய தலைமுறை உருவாகி விட்டது. அதனுடைய உணர்நிலைகளும் பிரச்சினைகளும் வேறானவை. அந்தத் தலைமுறை முதல் தலைமுறையினரைப் போலவே சிந்திக்கும் என்றில்லை. ஆகவே இந்தப் பின்னணியில் தெரிவு செய்யப்பட்ட தரப்பு (NPP) அதற்கான உத்தரவாதத்தோடு நடந்து கொள்ளுமா? அவர்களுடைய தேவைகள் எவ்வளவு தூரம் நிறைவேற்றப்படும்? அவர்களுடைய பிரச்சினைகள் எவ்வளவுக்குத் தீர்த்து வைக்கப்படும் என்பதைச் சில ஆண்டுகள் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

புதிய ஆட்சித் தரப்பு இதுவரையிலும் அதிகாரத்தில் இருக்காதது. ஆட்சியதிகாரத்துக்கு வெளியே இருந்து அதிகாரத் தரப்பின் தவறுகளையும் ஆட்சிக்குறைபாடுகளையும் கண்டு, விமர்சித்து வந்தது.

அதனால் தன்னுடைய ஆட்சியையும் தான் பெற்றுள்ள அதிகாரத்தையும் முடிந்த வரையில் அது மிகப் பொறுப்புடன் நிர்வகிக்கும் என நம்ப முடியும். ஆனாலும் அதனுடைய ஆட்சி எவ்வாறு அமையும் என்பதை அறுதியிட்டுக் கூற முடியாது. ஆனால் அவர்கள் (NPP ) வந்த வழிகளின் சுவட்டைக் கொண்டு மதிப்பிடும் போது, மக்களுக்கான ஒரு நல்லாட்சியை நடைமுறைப்படுத்துவதில் கூடுதலான அக்கறை கொள்ளப்படும் என நம்பலாம்.

இந்த நம்பிக்கை வெற்றியளிக்குமானால் பிராந்திய அரசியல் முடிவுக்கு வந்து விடும். அதாவது, தற்போது உருவாகியிருக்கும் தேசிய அரசியலே மேலும் வலுப் பெறும். குறுந்தேசிய அரசியல் இல்லாதொழியும். எந்த வழியிலாயினும் மக்கள் மீட்சியடைவதே அரசியற் சிறப்பாகும்.

# வடக்கு கிழக்கு தமிழ் மக்கள்

(19ம் பக்கத் தொடர்ச்சி) ஜனாதிபதி ஒரு தெளிவான செய்தியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார். அதேவேளை வரலாற்றில் முதற்தடவையாக தேசிய கட்சியொன்றின் பல உறுப்பினர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பியிருக்கும் வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகளை கையாளுவதில் எத்தகைய அணுகுமுறைகளை கடைப்பிடிப்பதற்கு தாங்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை சிங்கள மக்களுக்கு கூற வேண்டிய பொறுப்பும் ஜனாதிபதிக்கு இருக்கிறது.

அதிகாரப்பரவலாக்கல் மற்றும் சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகள் தொடர்பில் ஆழக்காலூன்றிய எதிர்மறையான நிலைப்பாடுகளைக் கொண்ட பெரும்பான்மைச் சமூக நம்பிக்கையை வென்றெடுத்து இனப் பிரச்சினைக்கு அரசியல் இணக்கத் தீர்வொன்றை காண்பதற்கான சாதகமான சூழ்நிலையை தென்னிலங்கையில் உருவாக்குவதற்கு ஜனாதிபதி தன்னை அர்ப்பணிக்கவேண்டும். அதற்கான அரசியல் தகுதி அவருக்கு முழுமையாக இருக்கிறது.

முன்னைய சிங்கள தலைவர்களைப் போன்று சிங்கள கடும்போக்கு தேசியவாத சக்திகளினதும் மகாசங்கத்தின் பிரிவுகளினதும் நிர்பந்தங்களுக்கு அடிபணிந்தால் ஜனாதிபதி திசாநாயக்கவும் வரலாறு வழங்கிய அரிய வாய்ப்புக்களை தவறவிட்ட தலைவர்களின் பட்டியலில் சேர்ந்து கொள்வார் என்பது நிச்சயம். புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைகளை முன்னெடுப்பதற்கு முன்னதாக 13 வது திருத்தத்தை அவர் எவ்வாறு கையாளப் போகிறார் என்பது அவரது அரசியல் துணிச்சலுக்கு ஒரு அமிலப்பரீட்சையாக அமையும். இறுதியாக கடந்தவாரம் ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா சென்னை 'இந்து' ஆங்கிலப் பத்திரிகையின் கொழும்பு செய்தியாளர் மீரா ஸ்ரீனிவாசனுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்த ஒரு கருத்து முக்கிய கவனத்துக்குரியதாகும்.

எம்மைத் தோற்கடித்தவர்களினால் எழுதப்பட்ட எமது வரலாறு காரணமாக தவறான ஒரு எண்ணம் நிலவுகிறது. நாம் எமது பாதையை விரும்பித் தெரிவு செய்யவில்லை. எம் மீது அந்தப் பாதை திணிக்கப்பட்டது. எமது வன்முறைப் போராட்டம் அரச அடக்குமுறைக்கான எமது எதிர்வினையேயாகும். இலங்கையின் தற்போதைய அரசியல் தருணம் எந்தவிதமான காரணமும் இல்லாமல் ஆயுதமேந்திய பயங்கரவாதிகளாக சிலரை வருணிக்காமல் எமது கட்சியின் வரலாற்றை மாத்திரமல்ல நாட்டின் வரலாற்றையும் திருப்பி எழுதுவதற்கு வெளியைத் திறந்து விட்டிருக்கிறது என்று சில்வா கூறியிருக்கிறார். இது தமிழர்களின் போராட்டத்துக்கும் முழுமுழுதாகப் பொருந்தும். தங்களது ஆயுதப் போராட்டத்துக்கான மூலவேர்க் காரணிகள் குறித்து நிலவுகின்ற தப்பபிப்பிராயங்களை குறித்து தமிழர்களும் கூறுவதற்கு நீண்ட கதை இருக்கிறது என்பதையும் திரிபுபடுத்தப்பட்ட வரலாற்றை திருப்பி எழுதவேண்டிய தேவை இருக்கிறது என்பதையும் ஜே.வி.பி.- தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டது. அதனால் தங்களுக்கு வரலாறு வழங்கியிருக்கும் அரிய வாய்ப்பை தவறவிடாமல் பெரும்பான்மையின மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்து தேசிய இனப்பிரச்சினைக்கு காலந்தாழ்த்தாமல் அரசியல் இணக்கத் தீர்வு காண தலைவர்கள் முன்வரவேண்டும்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com













# விமானத்தில் பயணியின் கைப்பையைத் திருடிய கனடியத் தமிழ் கணக்காளர் கொழும்பில் கைது

இங்கிலாந்தின் லண்டனில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்த இலங்கை விமானத்தில் பயணித்த பெண் ஒருவரின் கைப்பையை திருடிய கனடா தமிழ்க் கணக்காளர் ஒருவரை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பன்னிப்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 55 வயதான குறித்த பெண், இங்கிலாந்து மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளின் குடியுரிமையை பெற்றுள்ள நிலையில் தற்போது இங்கிலாந்தில் வசித்து வருகிறார்.

அவர் 26 நவம்பர் 2024 லண்டனில் இருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL-504 இல் கட்டுநாயக்க விமான நிலையத்தை சென்றடைந்துள்ளார்.

அவரது கைப்பையில் சுமார் 14 இலட்சத்து 23,500 ரூபா பெறுமதியான 2,700 ஸ்டெர்லிங் பவுண், 02 ஆப்பிள் கைத்தொலைபேசிகள் மற்றும் 02 செம்சுங் கைத்தொலைபேசிகள் இருந்துள்ளன.

விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் கைப்பை தொலைந்து போனது, இது குறித்து அந்த பெண் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் ஊழியர்களிடம் முறைப்பாடு அளித்துள்ளார். விமானத்தில் சோதனை நடத்தப்பட்டாலும் அதை கண்டுபிடிக்க முடியவில்லை.

பின்னர், விமானத்தின் விமானி கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள இலங்கை விமான சேவை விசாரணை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தார்.

குறித்த விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கிய பின்னர், இலங்கை விமான சேவை விசாரணை அதிகாரிகள் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாருடன் இணைந்து அந்த விமானத்தில் இருந்த பயணிகளையும் அவர்களது பயணப் பொதிகளையும் முழுமையாக சோதனையிட்டுள்ளனர்.

இதன் போது இலங்கை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், கனடாவில் இரட்டைக் குடியுரிமை பெற்றவருமான 60 வயதுடைய நபரிடம் இருந்து காணாமல் போன கைப்பை மீட்கப்பட்டுள்ளது.

அப்போதும் அவர் திருடப்பட்ட ஸ்ரேலிங் பவுண்ஸை பயன்படுத்தி விமானத்தில் விற்கப்பட்ட 06 விஸ்கி போத்தல்கள் மற்றும் 03 வாசனை திரவிய போத்தல்களை வாங்கியுள்ளார். மீதமிருந்த ஸ்ரேலிங் பவுண்ஸ் மற்றும் மொபைல் போன்களும் கைப்பையில் காணப்பட்டன.

இதனடிப்படையில் சந்தேகத்திற்குரிய பயணி கைது செய்யப்பட்டுள்ளதுடன் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

இது இவ்வாறிருக்க ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் தேசிய விமான சேவை நிறுவனத்தை நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் குறிப்பிட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கத்தின் கீழ் அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் கடமைகள் மற்றும் செயல்பாடுகளை கோடிட்டுக் காட்டும் வகையில் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை விற்பனை செய்யும் திட்டத்தை கைவிடுவது என்ற அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு இணங்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் ஒக்டோபர் மாதம், ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமான சேவையை விற்பனை செய்யும் திட்டத்தை கைவிட்டு, அதிக இலாபகரமான நிறுவனமாக அதனை மறுசீரமைக்குமாறு ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க பணிப்புரை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் தலைவர் சரத் கனேகொட, இலங்கையர்கள் அனைவரும் பெருமைப்படும் ஒரு நிறுவனமாக ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் இருக்க வேண்டும் என்றும், அது இலங்கையர்களுக்குச் சொந்தமானதாக இருக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி திஸாநாயக்க அறிவுறுத்தியதாக தெரிவித்தார்

